REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 16 | சுன்னாகம் — விய — வைகாசி உ0, 2-6-'46 — ஞாயிறு | இதழ் 43

JAFFNA CO... LIBRARY ... JUN 3 1946 ... CEYLON.

# ஸ்ரீ சேனநாயகாவின் எதிரி

## சேர் ஒலிவருக்கு ஆதரவு

[நமது அரசியல் நிருபர்]

**இலங்கையிலுள்ள கொம்யூனிஸ்ட் தோழர்களுக்கு இருந்தாற் போலிருந்து சேர் ஒலிவர் குணத்திலகா மீது அபார அன்பு பிறந்திருக்கின்றது? சேர் ஒலிவர் ஒரு பொதுவுடைமைவாதியாக மாறிவிட்டாலும் அது நூதனமல்ல என்று இங்குள்ள தீவிர பொதுவுடைமைக்காரர்கள் கருதுகின்றனர்.**

ஸ்ரீ சேனநாயகாவை ஒரு மூலைக்குள் ஒதுக்கிவிட்டு சேர் ஒலிவரைப் பிரதம மந்திரிப்பதவியில் தூக்கி வைத்துவிடக் கொம்யூனிஸ்டுகள் முயற்சி செய்கின்றனா போலத் தோன்றுகின்றது. இதற்கு அறிகுறியாக இவர்கள் துண்டுப் பிரசுரங்களைத் தொகை வகையாக அரசாங்கசபைக்குள் திணிக்கவுந் திணிக்கின்றனர். "நாட்டின் ஒப்பற்ற வீரன் சேர் ஒலிவர். அவருக்கு எதிரியே கிடையாது." என்றெல்லாம் அத்துண்டுப் பிரசுரத்திற் காணப்படுகின்றது. அதில் நிறைந்துள்ள சில வார்த்தைகளை இங்கு தருகின்றேன். படித்துப் பாருங்கள்:

"ஒரு இராசதந்திரப் பாய்ச்சல் பாய்ந்து சேர் ஒலிவர் குணத்திலகா தமது எதிரி ஸ்ரீ டி. எஸ். சேனநாயகாவைப் பிரதம மந்திரிப் போட்டியில் தாண்டி விட்டார். புதிய சம்பளத் திட்ட அறிக்கை சம்பந்தமாகச் சேர் குணத்திலகா சகல கேள்விகளையும் வியக்கத்தக்க முறையிற் சமாளித்த விதம் அரசாங்கசபை அங்கத்தினரையே திணறச் செய்துவிட்டது. குதிரைப்பந்தய மைதானத்தில் சௌகரியமாகக் காரியம் பார்க்கும் இவ் வெற்றிவீரன் சமூகத்துறையில், இவ்வளவு தூரம் உள்ளத்தை நெகிழச்செய்து உணர்ச்சிப் பெருக்கில் திளைத்துவிட்டார் என்று கூறுவதா?

"அதிகார வர்க்கத்தினராற் சுரண்டப்படுந் தொழிலாளர் மீதும், சேவகர்மீதும், குமாஸ்தாக்கள்மீதும், பண்டகசாலைக் காவலாளர்மீதும் சேர் ஒலிவருக்கு எப்போது இப் பரோபகாரசிந்தை உண்டாயிற்று? இத்தனைக்கும் ஏதோ நியாயம் இருக்கத்தான் வேண்டும். ஒருவேளை அவர் சடுதியாகப் பொதுவுடைமைவாதியாக மாறியிருக்கலாம்.

"சீமையில் நிலவும் பொதுவுடைமை அரசாங்கத்தின் சிறப்பை சேர் ஒலிவர் உணர்ந்திருப்பது போல் வேறெவரும் அறியமுடியாது. இப்புதிய ஆட்சி ஊட்டும் உற்சாகமும் நம்பிக்கையும் நவயுகத் தோற்றத்துக்கு முற்குறியாக இருக்கின்றன. இப்புதிய உலகிற் சகல மக்களும்—சுரண்டுவோரும் சுரண்டப்படுவோரும் இயற்கையன்னையின் பெருநிதியை அனுபவிக்கப்போகின்றனர். இத்தகைய ஆட்சியின் செல்வவளமும் சௌந்தரியமும் சேர் ஒலிவரை வசப்படுத்தி விட்டன.

"ஒரு சிறந்த அரசியல் தந்திரத்தின்மூலம் இவர் நாட்டுமக்களின் கவனத்தை யெல்லாங் கவர்ந்துவிட்டார். இத்தகைய இணையற்ற வீரனுக்கு நாட்டில் எதிரிகளே யிருக்கமுடியாது. இவ்வுண்மையை ஸ்ரீ சேனநாயகா உணர்ந்து, கௌரவத்துடன் அரசியல் வாழ்க்கையினின்றும் விலகிக்கொள்வார் என்பதில் எங்களுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை யிருக்கின்றது. அப்படியானால் இவர் செய்த சேவைகளை நாடு மெச்சியே தீரும். ஸ்ரீ சேனநாயகாவுக்கு உடல்நலம் குன்றுகின்றது. எதிர்காலப் பிரச்சினைகள் இவருடைய மூளையைக் கலக்கு கலக்கென்று கலக்கி வைக்குந் தன்மை வாய்ந்தன. அரசியற் பொருளாதார விஷயங்களை நன்கு ஆராய்வதற்கு இவருக்கு மூளைப்பலம் போதாது.

"எந்தவிதத்திலும் சேர் ஒலிவர் தான் இலங்கையின் முதலாவது பிரதம மந்திரிப்பதவிக்குத் தகுதி வாய்ந்தவர்." இந்தமாதிரி அந்தத் துண்டுப் பிரசுரம், சேர் ஒலிவர் குணத்திலகாவை ஆகாயத்திலே தூக்கிவைத்து அதிகமாகப் புகழுகின்றது.

### சங்கதி என்ன?

இவ்வளவுதூரம் சேர் ஒலிவரைக் கொமயூனிஸ்டுகள் எதற்காகப் போற்றுகின்றனரோ தெரியவில்லை. இவர் ஸ்ரீ சேனநாயகாவின் உற்ற நண்பன். போதாக்குறைக்கு டெய்லி நியூஸ் பத்திரிகாலயத்திலிருந்து 'வெளிவருந் தினசரிகளின் ஆதரவும் இவர்களுக்குண்டு. இப் பத்திரிகைகள் இலங்கையின் பிரதம மந்திரிப் பதவியை ஸ்ரீ சேனநாயகாவுக்கும், நிதிமந்திரிப் பதவியைச் சேர் ஒலிவர் குணத்திலகாவுக்கும் ஒதுக்கி வைத்திருக்கின்றன. இதற்கிடையிற் கொம்யூனிஸ்டுகளின் துண்டுப்பிரசுரம் இவர்களின் கோட்டைகளைத் தகர்த்துவிடப் பார்க்கின்றது. ஸ்ரீ சேனநாயகா பணக்காரக் கும்பலின் பிரதிநிதி என்பதை அறிவோம். அதேபோலச் சேர் ஒலிவரும் யுத்தத்துடன் பெரிய புள்ளியாகப் பரிணமித்திருக்கின்றார். ஆகவே இவர்மீது பொதுவுடைமைக்கா...

## சீமை சென்று படித்த பாடம்!

...ருக்குப் பிறந்திருக்கும் அன்பும், நம்பிக்கையும் அநேகருக்கு நூதனமாகத் தோன்றுகின்றது. ஸ்ரீ சேனநாயகாவுக்குச் சகல பக்கங்களிலும் எதிர்ப்பு இருந்தபோதிலும் சில பலமான கோஷ்டிகளின் ஆதரவும்இருக்கவேயிருக்கின்றது.

சிங்களத்தீவின் இளஞ்சிங்கமென அட்டகாசஞ் செய்து பிடரியை உலுப்பிக்கொண்டு வந்த, சிங்கள மகாசபையின் தலைவரான ஸ்ரீ பண்டாரநாயகா ஸ்ரீ சேனநாயகாவின் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டதே ஒரு புதுமை! அத்துடன் ஸ்ரீ மொலமுரே பலபாகங்களுக்குஞ் சென்று ஸ்ரீ சேனநாயகாவுக்கு ஆதரவு தேடுவதுடன் ஐக்கிய தேசிய வாசிகளின் கட்சிக்குப் பலந்தேடுகின்றார். இதற்கிடையிற் கொம்யூனிஸ்டுகள் ஸ்ரீ சேனநாயகா சீமையிலிருந்துகொண்டு வந்திருக்கும் அடிமைச் சாஸனத்தை ஒரு கை பார்த்துவிட்டுத்தான் மறுகாரியம் என்று சொல்லிக் கூக்குரலிடுகின்றனர்.

சேர் ஒலிவரைத் தட்டிக்கொடுத்துப் பிரதம மந்திரிப் பதவிக்கு ஆசைகாட்டி அரசியற் சிக்கலையுண்டுபண்ணுவது கொம்யூனிஸ்டுகளின் நோக்கமாக விருக்கலாம். ஸ்ரீ சேனநாயகா அதிகாரவர்க்கத்துடன் தோழமை பூண்டு ஏகாதிபத்தியக் கூடாரத்துக்கு முளைக்கட்டைகள் இறுக்குகின்றார் என்பது உண்மை. அதற்காக சேர் ஒலிவரைத் தூக்கி வைத்துவிட்டால் சோல்பெரித் திட்டம் கவிழ்ந்து போகமாட்டாது. அப்படியானால் இந்தக் கொம்யூனிஸ்டுகள் இனி ஸ்ரீ பொன்னம்பலம் அவர்களின் உதவியையும் நாடினாலும் நாடலாம். இனி ஒருபோதும் பிரிட்டனை நம்புவதில்லையென ஸ்ரீ பொன்னம்பலம் சங்கற்பம் செய்திருக்கின்றார் சீமை சென்று நல்ல சூடுபெற்ற பின்னர் தான் இந்த ஞானம் இவருக்கு உதித்திருக்கின்றது. இதற்காக அவரைப் பாராட்ட வேண்டும்? சிறிதளவு நீதியைத் தானும்சோல்பெரித்திட்டம்உதவவில்லையென ஸ்ரீ பொன்னம்பலம் நம்புகின்றார். இதனால் புதிய அரசியற்பிரமாணத் திட்டத்தைப் பகிஷ்கரிக்கக் கூடாதெனவும் தமிழ்மக்கள் ஒன்று சேர்ந்து தங்கள் உரிமைகளுக்காக வாதாட வேண்டுமெனவும் அவர் கருதுகின்றார். முறபோக்கான சிங்களவருடன் சேர்ந்து நாட்டின் விடுதலைக்காகத்தமிழர்உழைக்கவேண்டுமென்ற உண்மையை இப்போது தான் ஸ்ரீ ஜி. ஜி. உணர்ந்திருக்கின்றார். ஓரளவுக்குப் பொதுவுடைமை மணம் வீசும் கொள்கை தான் தமிழ்மக்களுக்கு ஏற்றதென ஸ்ரீ பொன்னம்பலம் நம்புவதிலிருந்து அவரும் இருந்தாற் போலிருந்துபொதுவுடைமைப்பக்தராக மாறிவிட்டாரெனக் கொம்யூனிஸ்டுகள் கருதினாலுங் கருதுவார்கள்.

ஏகாதிபத்திய தேவதைகளுக்கு அநேகர் மடைபரவியவிடத்தும் ஸ்ரீ சேனநாயக பரவிய மடைதான நன்றாகப் பிடித்துக்கொண்டது. ஆகவே, சீமைத்தேவதைகள் ஸ்ரீ சேனநாயகாவின் உள்ளததிற்புகுந்து அவரை ஆட்டும் வரையும் ஆட்டிவைக்கின்றனர். அதிகார வெறியும் பதவி மோகமும் தலைக்கேறி யிருக்குஞ் சேனநாயகா பிரதம மந்திரிப்பதவி தமக்குக்கிடைத்தால் அதுவே போதுமெனநினைக்கின்றார். இந்த அற்ப சுகத்தையும் கௌரவத்தையும் விரும்பி இவர் இலங்கையின் அரசியல் முற்போக்குக்குக்கொள்ளி சொருகி விட்டார்.

# சோல்பெரித்திட்டம் உதவாது

## சமசமாஜிகள் போதனை

**அரசாங்கசபை சோல்பெரித் திட்டத்தை ஏற்றுக்கொண்டபோதிலும் நாட்டின் பலபாகங்களிலும் அதற்கு எதிர்ப்பும் இருக்கின்றதென்பதைக் கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சம சமாஜிகளின் கூட்டம் விளக்கியது.**

ஏகாதிபத்தியக் கோட்டையைத் தகர்க்கும் முயற்சியில் இலங்கையில் ஈடுபட்டுவரும் சமசமாஜிகளின் தலைவரான டொக்டர் என். எம். பெரேரா சேனநாயகா கோஷ்டிக்கு எச்சரிக்கை செய்வது போன்று, காரசாரமான சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கின்றார்.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற கூட்டத்தில் டொக்டர் என். எம். பெரேரா குறிப்பிட்டதாவது:

'சேனநாயகா — சோல்பெரி' திட்டத்துக்குத் தென் இலங்கையில் பலமான எதிர்ப்பு இருக்கின்றதென்பதை நீங்கள் உணரவேண்டியது அத்தியாவசியமாகும். தொழிலாளர்களும் கிராமவாசிகளும், சேனநாயகா, கொத்தலாவல, பண்டாரநாயகா கோஷ்டிகளை எதிர்த்துப் போராடுவதற்கு இப்போதே பலத்த ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்துவிட்டனர் என்பதை உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். புதிய அரசியல் திட்டம், டொனமூர்த்திட்டத்திலும் பார்க்க மகா மோசமானது. இது பணக்காரக் கும்பலின் ஆட்சியாகவே அமையும். ஆகவே தொழிலாளர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்பதை அழுத்தமாகத் தெரிவிக்கின்றேன்.

வழக்கறிஞர் ஸ்ரீ. பொ. நாகலிங்கம் பேசும்போது, தொழிலாளர்கள் தங்களுக்குச் சொந்தமான அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டு மெனவும், அப்படிச் செய்யாதவிடத்து அதிகாரத்தைப் பெறும் கட்சி நாட்டின் சுதந்திரத்துக்குப் பங்கம் விளைக்குமெனவும் உணர்ச்சியுடன் தெரிவித்தார்.

முதலாளி வர்க்கம் ஒன்றுகூடி சேனநாயகாவின் பட்டாளத்தைப் பலப்படுத்த முன்வந்து விட்டது. இதைப் பார்த்துக் கொண்டு தொழிலாளர் சும்மா இருத்தல் தவறு. ஆகவே. அவர்கள் பலமான முன்னணியைத் திரட்டவேண்டு மென வழக்கறிஞர் ஸ்ரீ. தர்மகுலசிங்கம் முழக்கினர்.

ஐக்கிய தேசியத் தமிழர் சபையின் நிர்வாகக் காரியதரிசி ஸ்ரீ. சாம் சபாபதி (வழக்கறிஞர்) பேசும்போது நாட்டின் நல்வாழ்வும் விடுதலையும் தொழிலாளர்களின் சக்தியிலேதான் தங்கியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

வட இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்துத் தலைவர் ஸ்ரீ. V. சோமசுந்தரம் கூறியதாவது:

இலங்கையின் சரித்திரத்திலே என்றும் நிகழாத ஒரு நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணம் செய்வது யாதெனத் தெரியாது திகைக்கின்றது. எந்தக் கட்சியைச் சேரலாமென்ற அவஸ்தை ஒருபுறம். இந்த அழகில் அரசியல் அதிகாரத்தை விரும்புபவர்களாகவே யாழ்ப்பாணத்துத் தலைவர்கள் காணப்படுகின்றனர். பட்டம் பதவிகளிலேயே அவர்களின் நாட்டம். புதிய தெரிவு நெருங்குகின்றது. அப்போதெல்லாம் தொழிலாளர்களின் சேமலாபங்களுக்காக உழைப்பவர்களையே நாடு ஆதரிக்கவேண்டு மென்பதைத் தெரிவிக்கின்றேன்.

டொக்டர் என்.எம். பேரோா தொடர்ந்து பேசியதாவது;-

"சில பத்திரிகைகளைப் புரட்டிப் படித்தால், ஸ்ரீ சேனநாயகா இலங்கையின் முடிசூடா மன்னன் தான் என்பதை நீங்கள் உணர்வீர்கள். ஆனால் ஸ்ரீ சேனநாயகா அசடுகள் நிறைந்த ஓர் உலகில் வதிகின்றார் என்பதை நான் அவருக்குக் கூறுகின்றேன். அநேக அரசாங்கசபைப் பிரதிநிதிகளுக்கும் புதிய பார்லிமென்டில் பதவி அளிப்பதாக ... வார்த்தை சொல்லி ஸ்ரீ சேனநாயகா சோல்பெரித் திட்டத்தை அரசாங்க சபையில் அரங்கேற்றியிருக்கின்றார். ஸ்ரீ தகநாயகாவை மட்டும் தமது வலைக்குள் மாட்ட முடியவில்லை. சுதந்திரம் சுடர்விட்டெரியும் இடம் இலங்கையில் ஒன்று இருக்குமாகில் அது யாழ்ப்பாணமேயாகும். அத்தகைய நாட்டின் பிரதிநிதிகள் கூடச் சோல்பெரித் திட்டத்துக்குத் தலைகுனிந்துவிட்டனர்.

அரசியல் அதிகாரம் கிடைத்தவுடன் சர்வஜன வாக்குரிமைக்கு உலைவைக்க முயற்சித்த கோஷ்டி இப்போது புதிய திட்டத்தில் இரண்டாவது சபை ஒன்றிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றது.

இதுவரை தேசாதிபதி பிரயோகித்த விசேஷ அதிகாரத்தை இனிப் பணக்காரக் கும்பல் பிரயோகிக்கப் போகின்றது. மந்திரி சபைக்கு இப்போதே பிரதிநிதிகளைக் குறித்து விட்டனர். இனிப் புதிய தேர்தல் முடிந்தவுடன் அவர்கள் தங்கள் ஆசனங்களிற் போய் அமரவேண்டியதுதான். கல்வி மந்திரி கன்னங்கரா 'அரோகரா' போடவேண்டி நேரிடும். ஸ்ரீ சேனநாயகாவுக்கு இலவசக் கல்வித் திட்டம் கட்டோடு பிடியாது. இலவசக் கல்வித் திட்டத்தைத் தரைமட்டமாக்கி விடுவதாக ஸ்ரீ சேனநாயகா, அவரை எதிர்த்து நிற்கும் கத்தோலிக்கருக்கு உறுதிகூறி அவர்களுடைய ஆதரவையும் பிரதி உபகாரமாகப் பெற்றுவிட்டார்.

சுகாதார மந்திரி சில்வா பாடும் எக்கச்சக்கந்தான். ஸ்ரீ பண்டாரநாயகா சிங்களமகா சபையை. ஒரு மந்திரிப் பதவிக்காக ஸ்ரீ சேனநாயகாவுடன் பேரம்பேசி விற்று விட்டார். ஆனால் இவர் உதைவாங்குவார் என்பது மாத்திரம் நிச்சயம். ஸ்ரீ. சேனநாயகாவின் சகோதரனின் புதல்வர் அநேகர், பதில் மந்திரிப் பதவிகளை வகிப்பார்கள். டொக்டர் நிக்கலெஸ் அற்றிக்கலா சுகாதார மந்திரியாக அதிகாரஞ் செலுத்துவார்.".

### வடமராட்சியில்

வடமராட்சியில் நிகழ்ந்த சமசமாஜிகளின் கூட்டத்தைப் பற்றி 'வடமராட்சி வாசன்' பின்வருமாறு எழுதுகின்றார்:

புலோலி சிவன் கோயில் மணி டாண் டாண் என்று அடிக்கிறது! அதன் முன்றிலில் மனித ஈட்டம் அலைமோதுகிறது! தொழிலாளரும், மத்திய வகுப்பாரும் சகோதர பாவத்துடன் அடக்கமாய் அமருகின்றனர்! வீதியின் ஒரு பாங்கர் இரத்தினக் கம்பளங்களால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் செஞ்சட்டைப் புலியொன்றும், புகைக்கண்ணுடிப் புரவியொன்றும் அமர்ந்திருந்த கோலம் வடமராட்சியின் எதிர்காலப் புரட்சியின் வெற்றிச் சின்னத்தைக் காட்டியது.

முதன் முதல் ஒரு பயில்வான் மேடையில் எழுந்து நின்றார். அவர் தர்மக் கூட்டங்கள் எல்லாஞ் சேர்ந்து சிங்கமாக உருவெடுத்த போர்வழியாம். (குலம்—கூட்டம்) சிங்கம் எழுந்ததும் கரகோஷம் வானைப் பிளந்தது. அது கர்ச்சிக்கத் தொடங்கியது. செஞ்சட்டைப் புலியைப்பற்றிச் சாங்கோ பாங்கமாகச் சபைக்கு அறிமுகப்படுத்தியது.

தலைமை வகித்த புகைக்கண்ணுடிப் புரவி எழுந்தது. பாயத் தொடங்கியது. ஒரே மூச்சில் இந்தியாவைத் தாவியது. சபர்மதிக்குள் புகுந்தது. ஆனந்த பவனத்துள் அடியெடுத்து வைத்தது. சிறைச்சாலைகளுக்குள் நுழைந்தது. வடமராட்சிக்குத் திரும்பியது. "இந்தியாவைப் பார்; இலங்கைச் சமசமாஜக் கட்சியைப்பார்" என்று இயம்பியது. அது ஜெயக்கொடி பிடித்துக்கொண்டு அமர்ந்தது.

எழுந்துவிடையா செஞ்சட்டைப் புலி! முதலாளி வர்க்கப் பேய்களையும், அதிகார வர்க்கப் பூதங்களையும் கிழிகிழியென்று கிழித்தது. இலங்கையின் வரப்பிரசாதம் என்று அரசாங்கசபை அண்ணுத்தைகளால் வரவேற்கப்பட்ட சோல்பரி சேனநாயக்கா அடிமைச் சாசனத்தை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்தெறிந்தது.

கடைசியாகக் காந்தியத்தோழர் ஒருவர் தோன்றினார். "உங்கள் கட்சிக்கு முதல்முதல் வெற்றி கிடைக்கப்போவது வடமராட்சியிலேதான்" என்று ஆணையிட்டு அறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கேசன்துறையில்

திறமான இங்கிலீஸ் சீமேந்து, மலையாளம் கொழுக்கி ஓடுகள், செங்கல், மற்றும் பல சாய்ப்புச் சாமான்களும் விலைசகாயமாய்க் கிடைக்குமிடம்:—

**கார்கோ ட்ருன்ஸ்போட் கம்பெனி**
(CARGO TRANSPORT Co.)
**காங்கேசன்துறை**

தந்தி விலாசம்: "நியூகோ"; டெலிபோன் நம்பர்; 5
[2784]


## வலிகாமம் வடக்குப் பண்டகசாலைச் சமாஜம்

இச்சமாஜத்தின் 2-ம் வருடாந்தக் கூட்டம் 25-5-46 இல் மல்லாகம் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இணைக்கப்பட்டுள்ள 64 பண்டகசாலைகளின் பிரதிநிதிகள் அநேகரும், அவற்றின் நிருவாகசபை அங்கத்தவரிற் பலருஞ் சமுகங் கொடுத்தனர். சமாஜ நிருவாக சபை இக்கூட்டத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கையில், சமாஜத்துக்குரிய இரு வியாபார நிலையங்களிற் பொருட்கள் வாங்கும் பண்டகசாலைகளும் தனிப்பட்ட வியாபாரக் கடைகளும் 69 எனவும் சென்ற ஆண்டில் 21 இலட்சம் ரூபாவுக்குமேல் வியாபாரம் செய்யப்பட்டதெனவும், செலவுகள் நீக்கிச் சுத்தலாபம் ஏறக்குறைய 12000 ரூபா வெனவும் கூறப்பட்டது. பிரிக்கப்படக்கூடிய லாபத்தைக்கொண்டு, பங்குகளுக்கு லாபம் கொடுக்கவும், பொருள் வாங்கிய ரொக்கத்துக்குத் தக்கதாக உபகாரப் பணம் வழங்கவும் தீர்க்கப்பட்டது.

அரசினரால் மல்லாகத்தில் நடத்தப்படும் மொத்த வியாபார நிலையத்தை C. W. E. இச்சமாஜம் கையேற்க வேண்டுமெனவும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வடமாகாண உதவி அதிபர் திரு. M. சிறீகந்த C. C. S. "உணவுப்பொருள் விருத்தி" என்னும் பொருள்பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். இது சம்பந்தமாக அரசினரால் செய்யப்படும் பல எத்தனங்களில் ஐக்கிய சங்கங்களும், தனியாட்களும் எவ்விதம் ஒத்துழைக்கலாமெனவும் விரிவாகக் கூறினர்.

ஈற்றில் ஐ. ச. உதவிப் பதிவுகாரியஸ்தரில் ஒருவராகிய திரு. R. இராசரத்தினம், இச்சமாஜம் மிகவும் அனுகூலமுள்ளவோர் ஆண்டை முடித்திருக்கிறதெனவும், வருங்காலத்தில் பண்டகசாலைகள் முன்னேறுவதற்கு செய்யக்கூடிய முயற்சிகளைக் குறித்தும் பேசினர். புதிய வருடத்துக்குரிய உத்தியோகஸ்தரையும் நிருவாகசபையையும் நியமனஞ் செய்தபின் கூட்டம் முடிவுற்றது. கடிதம்.

## சுதந்திர சேவா சங்கம்

இம்மாதம் 26-ந் திகதி கூடிய திருகோணமலை சுதந்திர சேவா சங்க நிர்வாக சபைக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. "தாய்நாட்டின் தவப்புதல்வர் ஒப்பற்ற தியாகி திரு. புலாபாய் தேசாயின் பிரிவைக் குறித்து சங்கம் அனுதாபப்படுவதுடன் அவர் செய்த புனிதத்தொண்டையும் பாராட்டிப் போற்றுகிறது." கடிதம்.


**விலக்கு! விலக்கு!!**
**யந்திரங்கள்**
எங்கள்
அரிசி குத்தும் யந்திரங்களும்
மா அரைக்கும் யந்திரங்களும்
இணைக்கருவிகள் (Spare Parts)
கொஞ்சமும் வந்திருக்கின்றன
தேவையானோர் தாமதமின்றி
எழுதிப்பெற்றுக்கொள்ளுங்கள்
**சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிடெட்**
Samuel Sons & Co., Ltd.
கொழும்பு — யாழ்ப்பாணம்
[2785-ii]


## வலிகாமம் மேற்கு ஆசிரியர் விடுமுறைக் கழகம்

மேற்படி கழகம் இம்மாசம் 15, 16, 17-ம் திகதிகளில் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் நடைபெற்றது. இப்பகுதி வட்டார வித்தியாதரிசி திரு. C. முத்தையா அவர்கள் ஆசிரியரின் ஒத்துழைப்போடு கழகத்தைச் சிறப்புற நடத்தினர். முதலாம் நாள், அரசாங்க சபைத்தலைவர் சேர் வை. துரைசுவாமி அவர்கள் கழகத்தினைத் திறந்து வைத்து அவைத் தலைமை தாங்கினர். இளைப்பாறியிருக்கின்ற வித்தியாதிகாரி A. J. R. வேதவனம் அவர்கள் இக்காலக் கல்வி முறை என்னும்பொருள்பற்றி மூன்றுநாளும் தொடர்ந்துபேசினர். வித்தியாதிகாரி அவர்கள் பழைய முறைப் பாடசாலைக்கும் புதிய முறைப் பாடசாலைக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கிக் கல்வித் துறையில் புதிய பல அம்சங்களையும் முறைகளையும் புகுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். ஆங்கிலத்திலும் ஆரம்ப வகுப்புகளில் படிப்பிக்கும் சில சீரான முறைகளை மூன்று நாளும் தொடர்ந்து பேசினர். வித்தியாதரிசி M. இராசசுந்தரம் அவர்கள் புள்ளிகளைத் தரப்படுத்தல் என்னும் பொருள்பற்றிச் சிறந்த விளக்கம் காட்டினர். கீழ்மாகாண வித்தியாதிகாரி S. U. சோமசேகரம் அவர்கள் பிரதம பாடசாலைகளிற் சரித்திரம் கற்பித்தல் என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார்.

இரண்டாம் நாள் கழகத்தலைவராக வடமாகாண அதிபர் C. குமாரசுவாமி C. C. S. அவர்கள் இருந்தனர். திரு. A. J. R. வேதவனம் அவர்களின் விரிவுரைகளோடு, இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் திரு. V. செல்வநாயகம் அவர்கள் "கவிதை கற்பித்தல்" என்னும் பொருள்பற்றியும், திரு. S. U. சோமசேகரம் அவர்கள் ஆசிரியர் சக்தியைப் பேணுதல் என்னும் பொருள்பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

மூன்றும் நாள், வடமாகாண வித்தியாதிகாரி திரு. V.K. நாதன் அவர்கள் கழகத்தலைவராயிருந்தனர். பரீட்சைகள் ஆயத்தஞ் செய்யும் முறை" என்னும் பொருள்பற்றிக் கொழும்பு வித்தியாகந்தோர்ப் பிரதமபரிசோதகர் திரு D. C. அருளானந்தம் அவர்கள் திரு. S. U. சோமசேகரம் அவர்கள் "நடகாலக் கல்வியின் சில முக்கிய அம்சங்கள் என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினர்.


**FOR SALE**

48 acres paddy land (5 acres high land and 43 acres paddy cultivation) barbed wire fence complete with brick in lime motor well 2 rooms and labourers shed situated at 2¼ mile Post, Paranthan, Murasumuddai, Main Road.

Apply to:
**A. Thillyampalam**
(Town Overseer)
Vannarponnai.



**புகையிலைப் பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்**

# புகையிலை

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிறார்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

# C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும்
— பெறமுடியும் —

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சழதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

**COLOMBO COMMERCIAL CO., LTD.**

Incorporated in Great Britain.
Liability of Members Ltd.
[2777]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க இலக்கியம்

# செவிலியின் கவலை

பண்டிதர் க. சந்திரசேகரம்

பேயுந் துயிலும் இருள் செறிந்த நடுயாமம். 'சிவன் உமையைத் துறந்தாலும் வசிட்டன் அருந்ததியைத் துறந்தாலும் நீ நின் துணைவியைத் துறவேல்' என்று கூறித் தலைவியைத் தலைவனிடம் கையடை கொடுத்து, அந்த யாமத்தில் வழியனுப்பி வைத்தனள் தோழி.

அன்றிரவு தூக்கம் வரவில்லைத் தோழிக்கு. இவ்வளவு நாளும் தலைவியுடன் ஒன்றாய்ப் படுத்துறங்கிய அவளுக்கு எவ்வாறு தூக்கம் வரும்? விடிஇறது, தலைவியைக் காணவில்லை. தனித்து நிற்குந் தோழியைக் காணுகிறாள் செவிலி. "எங்கே என் மகள் யாண்டுங் கண்டிலனே" என்று வினவுகிறாள். "களிற்றினின்று என்னுயிரைக் காத்தருளிய ஒருவர் என் மனத்திருக்க, கொள்ளைநிதியை ஈகின்றானெவனோ அவனுக்கே என் மகள் உரியள் என என் பெற்றார் சொற்றனராம்" என நெட்டுயிர்ப்புடன் எனக்குக் கூறித் தன் காதலனுடன் செல்ல மனவுறுதிகொண்டாள், "இது நேற்றைத் தினம் நடந்தது. வேறொன்றுந் தெரிந்திலன் அம்மா" என்று கூறினள்தோழி. செவிலியின் மனம் ஒரு நிலைப்படாது சுழலுகின்றது. கால்கள் தடுமாறுகின்றன. கண்களிலிருந்து நீர்பெருகுகின்றது, என்ன செய்வது என்று ஒன்றுந் தெரியவில்லை. "இராமனோடு சீதை காட்டுக்குப் போயினளே! இது பெண்களுக்கு ஏற்ற செயலாமோ?" என்று என்னை வினவிய கருத்து முன்னர் அறிந்திலனே. ஐயோ!" எனத் தன்மடமைக்கு இரங்குகின்றாள். 'ஏ! துர்க்கா தேவி அருள்புரிந்து போகத்துணை செய்த நீ மீண்டுவரத் துணை செய்ய அருள்புரியமாட்டாயா?' என்று பாலைநிலத் தெய்வத்தை வேண்டுகிறாள். நடந்ததை நற்றாய்க்குக் கூறுகிறாள்.

சுரம் என்று நினைக்க நற்றாயின் மனம் கொதிக்கிறது. "வானஞ் சொரிக மழை கதிரோனை மறைக்க மஞ்சு—கானந் தழைக்க கனமயில் ஆலுக காவிடைநற்—றேனுஞ் சுரும்புஞ் சேறிக" என்றும், செங்கல்லைப் பொன்னாக்கிய இறைவன் திருவருள் என்பேதை சென்ற சுரத்தைக் காவிரிநாட்டைப்போற் குளிர்விப்பதாக' என்றும் சுரந்தணிவிக்கிறாள். பெற்றமனம் பித்தல்லவா? பஞ்சில் மிதிக்கினும் நோம் எனச் சொல்லும் தன் மகளின் மென்பதங்களையும் வெஞ்சுரத்தில் பரந்துபட்ட பரற்கற்களையும் ஒப்பிடுகிறாள். காந்தள் மலரைக் கண்டு பாம்பென அஞ்சும் அவளது அச்சத்தை எண்ணி அஞ்சுகிறாள். இவ்வாறெல்லாம் தன் மகளின் உடல் மென்மைக்கும் உளமென்மைக்கும் மெலிந்திரங்கும் நற்றாய் படுந்துயர் செவிலிக்கு மேலுந் துயரைக் கூட்டுகிறது. இருவரும் இவ்வாறு இரங்கிக்கொண்டிருப்பதாற் பயனில்லை. 'குறுகிய வடிவங்கொண்டு ஓரடியால் பூமிமுழுவதையும்அளந்தாராம்.வாமனமூர்த்தி குறுகிய வடிவுடைய அகத்தியமுனிவர் கடலைஒருகையில்உழுந்தளவுநீராயெடுத்தாராம். குறுகிய அவர்களது ஒரு காலடிக்கும் ஒரு கையில் நீருக்கும் உட்பட்டதுதானே இப் பூமி. அன்றியும்,

"நிலந் தொட்டுப்
புகார்வானம் ஏறார்
இலங்கிரு முந்நீர்
காலிற் செல்லார்
நாட்டின் நாட்டின்
ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை
தெரியில்
கெடுநரு முளரோ
நம்காத லோரே"

ஆகையால் எப்படியுந் தேடல் எளிது' என்று ஆற்றுத் தாயைத் தேற்றி மகளைத் தேடிச் செல்லலானாள்.

பொழுதுபுலர்ந்தது. சிலநாழிகை ஆயிற்று. சூரியனும் தன் வெம்மையைக் காட்டத் தொடங்கிவிட்டான், எப்படியும் மகளைத் தேடிக்கொணரவேண்டும் என்னும் எண்ணமுடைய செவிலிக்கு வெப்பமேது? தட்பமேது? அவளது மனவேகத்துக் கேற்பக் கால்களும் அடியெடுத்துவைத்தன. வழியிலே முக்கோற்பகவர் சென்றனர், அவர்களை அணமி, 'நீவிர் வரும் இந்நெறிக்கண் என் மகளைக் கொண்டு ஒரு காளை செல்வதைக் கண்டீரோ?' என வினவுகிறாள். 'பூவிலே தேன் பிறக்கிறது. ஆனால் அத்தேனால் வண்டுக்கல்லது பூவுக்கேதும் பயன் கண்டனையா? கடலிலே பிறந்த அமுதம் யாருக்குப் பயன் கொடுத்தது? . கடலுக்கா? இல்லை, வானுலகத்தில் வாழும் அமரர்க்குப் பயன் கொடுத்தது. அதுபோலவே நினக்கும் நின் மகள்' என்று அவர்கள் செவிலிக்குப் புத்தி புகட்டினர். அதனை அவள் கேட்டாற்றானே! பித்துப்பிடிததவள் போல் மேலும் அந்நெறிக்கண் மகளைத் தேடிச் செல்லலானாள்.

பின்னர் பாலைநிலத்தில் வாழும் ஓர் எயிற்றி அந்நெறிக்கண் வந்தனள். 'வள்ளி முருகனுடன் போயதும் அதனால் என்றும் தூராச் சிறப்புவாய்ந்ததுமாய இந்நெறிக்கண் என் மகள் கள்ளி ஒரு காளையுடன் சென்றதைக் கண்டனையா?' என்று அவளை வினவுகிறாள். கண்டாற்றானே அவளிடம் பதிலை எதிர்பார்ப்பது? அவளின் தலையசைப்பைக் கண்டு மேலும் நடந்து செல்கின்றாள். சுரத்தின் மத்தியில ஒரு குராமரம் நின்றது. 'குரவே! புத்தி புகட்டி என்பேதையைத் திருப்ப உனக்கும் மலர்வாய் அடைத்துவிட்டதா? நீயும் என்னைப்போல் ஒன்றல்ல பல பாவைகளைப் பெற்றனையல்லவா?' என்று அதைப் பழித்து அப்பாலும்செல்லுகிறாள். செல்லும் நெறிக்கண் இறந்த புலியொன்று கிடந்தது. புலியைக் கண்டவுடன் புண்ணில் வேலை நுழைத்தாற்போல மகளைப் பற்றிய துயர் மேலும் கூடுகிறது. அப் புலியின் கிட்டச் சென்று பார்க்கிறாள். வேலெறிந்தகாயங்கள் அதில் இருந்தன. அதன் பக்கத்தில் ஒரு காளையின் சுவடுகளும் காணப்பட்டன. சிறிதுதூரத்தில் இச்செயலைப் பார்த்து அஞ்சி நின்ற தன்மகளின் சுவடுகளும் காணப்பட்டன. அச்சுவடுகளைக் கண்டவுடன் 'நான் கையெடுத்த தெய்வம் என் மகளைக் காத்தது' என்று அப்பாலுந் தேடிச் செல்லுகிறாள்.

காதலனும் காதலியுமாக இருவர் அவ்வழியே வந்தனர். அவர்களைக் கண்டு தன் மகள் மீண்டு வருகின்றாள் என்று மகிழுகிறாள். தன் மகளல்லாமை கண்டு, 'நும்மைப்போல் இருவர்போயினர்கண்டீரோ?' என்று வினவுகிறாள். 'எம்போல்இருவரைக் கண்டோம். அந்தக் காளை என் ஊர் பெயர் முதலானவற்றை வினவ, அக்காளையுடன்வந்த இளங்கொடி என் காதலியின் ஊர் பெயர் முதலானவற்றை அவளிடம் வினவினள். நாம் ஊரையும் பெயரையும் கூறினோம். அவர்கள் இவ்வழியேதான் நடந்து செல்லுகின்றனர். இதுவரை இக்கொடிய சுரத்தைக் கடந்து முகிலுறங்கும் பொழில் சூழ்ந்த மருத நிலத்தையடைந்திருப்பர்' என்று செவிலிக்குக் கூறினன் அக்காளை. அவள் மிக்க கவலையுற்று, 'ஊரவர் அலர்மொழிக்கு யாது சொல்வேன்? நற்றாயின் துயரை எவ்வாறு தவிர்ப்பேன்?' என்று மனமுடைந்து, திரும்பித் தன்னில்லம் நோக்கி மெல்ல மெல்ல நடந்தனள்.

# பிச்சை! பிச்சை!!

"மயில்வாகனன்"

மாசிமக நாளினிலே—முத்து
மாரியம்மன் கோயிலிலே
மாசில்விழாப் பார்க்க—ஆவல்
மனத்துடன்நான் சென்றேனே

திரள்திரளாய் ஆங்கே—மக்கள்
சென்றிருந்தார் ஆதலாலே
திரைகடலொலி போலே—சத்தம்
சென்றிருந்த தெங்கணுமே

அச்சத்தத் திடையே—"பிச்சை
ஐயா" என்றழலி
அச்சம் கொண் டதுவாய்
—காதில்
அணுகதப்பால் அகன்றதுவே

பிச்சை! பிச்சை!! என்றே
—எத்தனை
பேர் நின்று கேட்டிடினும்
'பிச்சை ஐயா' என்றழலி
—என்னைப்
பெருமிரக்கம் கொளச் செய்ய.

அந்த ஈனக்குரல் தான்—வந்து
அணுகந்த திசை நோக்கி
எந்தன் மனஞ் செல்ல—அங்கு
ஏகினேன் விரைவாக.

பெண்ணொருத்தி நின்றே
—"ஸ்வாமி!
பிச்சை யையா" என்றே
கண்ணில் நீர் வார—மிகக்
கதறி யழுதிட்டாள்.

பிச்சை யிடுவாரில்லை—பார்த்துப்
பேசாது நின்றார் கல்லாய்
'சிச்சீ மனங்கல்லோ
—இவர்க்கென'
சிந்தை தனிலெண்ணி.

அம்மா இந்தா என்றே—சதம்
ஐம்பது நீட்டி நன்றே
கைம்மாறாய்த் துதி சொல்வாள்
—என்ன
கருத்தில் எண்ணி நின்றேன்.

"போடா பயலே நீயும்—பிச்சை
போட ஆளாயினையோ
மாடா முழு மடையா—நீதான்
மனிதனோ" என ஏச.

நானறியேன் ஒன்றும்—உலகில்
நன்மைக்கு காலமில்லை
ஏனழுதாள் யாரிவள்—என்னை
ஏனிகழ்ந்தாள் என்றெண்ணி

நிற்கையிலே ஒருதடியன்
—கண்ணில்
நீர்ததும்பும் பையன்றன்
பொற்கையிலே பற்றிவந்து
—இன்பமுடன்
புகுந்தான் குழு நடுவே.

ஆ! என் பிச்சையையா
—மகனேயென்
றவளணைத்து முத்தமிட்டாள்
நானென் மடைமையினை
—உணர்ந்து
நகை கொண்டேன் கேளீரே.

# கன்னன் கடைநாட் கொடை

பொ. பாலசிங்கம்

வண்மையிற் சிறந்த கன்னன் தனது ஆருயிர்த் தோழனான துரியோதனனுக்காகப் போர்க்களஞ் சென்று போர்புரிகிறான். கடைசியாக அருச்சுனன் விட்ட அம்பினால் உயர் துறக்கிறான். பராக்கிரமம் வாய்ந்த பாண்டவர் தன் தம்பியர் என்பதை யறிந்தும், அவர்களுடன் சேர்ந்தால் தான் சக்கரவர்த்தியாகலாம் என்பதை யுணர்ந்தும், அந்த ஆசையை அவன் மதியாது தன் தம்பியரின் பகைவனாகிய துரியோதனனையே மதித்தான். அவன் விரும்பியிருந்தால் தன் உடன் பிறந்த சகோதரருக்காக அவர்களுடன் சேர்ந்து துரியோதனனை வீழ்த்தியிருக்கலாம்—சக்கரவர்த்தியாகலாம். ஆனால் அவன் அந்த ஆசையை விரும்பினானல்லன். "உண்டவீட்டிற்கு இரண்டகஞ் செய்யக்கூடாது" என்ற காரணத்தினால், தனக்கு வரவிருந்த அரசைத் துறந்தான். சகோதரர் என்ற முறைமையை மறந்தான். தன் உயிரையே தியாகஞ் செய்தான்.

பாவம்! ஒன்றுமறியாத அர்ச்சுனன் கன்னனுடன் போர்செய்து அவனை வீழ்த்தி விட்டான். கன்னன் அவனது உடன்பிறந்த சகோதரனென்று சொல்லியிருந்தால் அந்தக் கடுமையான போர் நடந்துகொண்டிருந்த நேரத்திலும் அருச்சுனன் அப்படியே ஆயுதங்களைப் போட்டுவிட்டுக் கன்னனின் பாதங்களில் வந்து வீழ்ந்திருக்கமாட்டானா? பாரதப் போரும் அப்படியே நின்றுவிடுமல்லவா? பாவம்! கன்னன் கூட உயிர்பிழைத்திருப்பான். எல்லாவற்றிற்கும் கண்ணனின் சூழ்ச்சிகள் இடங்கொடுத்தாற்றானே!

கன்னனின் உயிர் பிரியப் போகின்றது. அதைக் கண்ட கிருஷ்ணர் அருச்சுனனிடம் போரை நிறுத்தச் சொல்லிவிட்டு ஒரு முதிய பிராமண வடிவுடன் கன்னனிடம் வருகிறார். ஏன்? அவனின் பிரியும்உயிரைத் தடுக்கவா? அல்லது பிரியும் உயிருக்கு ஏதாவது ஆறுதல் வார்த்தையளிக்கவா? எந்தநோக்கம்தான் கிருஷ்ணரின் மனதில் தோன்றியிருந்ததோ யார் கண்டார்கள்! அவர் வந்தது அவனிடம் யாசிப்பதற்கு, என்பதை மாத்திரம் அவரின் வார்த்தைகள் தெரியச் செய்தன. 'உன்னைவந்து இரந்தவர்கட்கு நீ இல்லையென்னாது கொடுப்பாயென்று கேள்விப்பட்டேன் மேருவினிடைத்தவஞ் செய்த நான் வறுமைப் பெருந்துயர் ஒன்றினால் உன்னிடம் வந்தேன்' என்றார் கிருஷ்ணர்.

அம்பு ஏறுண்டு வருந்திக் கொண்டு கிடக்கிறான் கன்னன். ஆவி சொற்ப நேரத்துட் பிரிந்துவிடும். இந்த நிலைமையில் ஒருவனைப் பிச்சை கேட்டால்—கேட்கப் போகிறவனின் மனம்தான் என்ன, கல்லா?—அவன் மனம் என்ன வேதனைப்படும்! "நான் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறேன். இவன் என்னிடம்யாசிப்பதற்கு வருகிறான். எனது நிலைமையை இவனால் அறியமுடியவில்லையா"? கன்னன் இப்படிச் சொல்லவில்லை. அவனுக்கு அந்த நேரத்தில் அக்கிழப் பிராமணனின் வார்த்தைகள் வேதனையைக் கொடுக்கவில்லை. ஆனால் அவை அப்பொழுது அமுதம் போன்றிருந்தன அவனுக்கு. அவன் முகத்தில் புன்னகையுடன் 'நான் தரத்தக்க பொருள் என்ன?' என்று கேட்டான். அப்பொழுது அவன் மனதில் வேதனையொன்று ஏற்பட்டிருத்தல் வேண்டும். ஐயோ! இவர் இப்பொழுது என்னிடம் இல்லாத பொருளைக் கேட்டால் நான் இந்த நிலைமையில் என்ன செய்வேன்' என்று அவன் மனம் பதைபதைத்துக் கொண்டிருந்திருக்கும். அந்தப் பிராமணன் கேட்கும் பொருளை அப்பொழுது கொடுக்காவிட்டால் பிராமணனின் சாபத்திற்கும் வசைமொழிக்கும் ஆளாக நேரிடும். இவ்வளவு காலமும் இரந்தவர்களுக்கெல்லாம் இல்லையென்னாது கொடுத்தான். இந்தக் கடைசி நேரத்தில் கொடாமல் விட்டாலோ அவனின் பிரியும் உயிர் சோகத்துடன்தான் பிரியும். இவ்வளவு காலமும் அவன் கொடுத்து அனுபவித்த இன்பம் இந்தக் கடைசி நேரத்தில்—அவன் வாழ்வின் முடிவுக்காலத்தில்—கொடாமல் விட்டால், எல்லாம் அடியோடு பறந்துவிடும். அவன் ஆன்மா சந்தோஷமாகச் சாந்தியடையமாட்டாது. உண்மையில் அவன் மனம் அந்த நேரத்தில் வருந்தித்தான் இருக்கும். ஆனால் அது அவனில் அதிக நேரம் நிற்கவில்லை. கிருஷ்ணர் இரக்கமில்லாமலே அவனிடம் வந்திருந்தாலும் அவனைக் கண்டவுடனாகுதல் அவரின் மனம் இளகியிருக்கவேண்டும். நல்லவேளை! அந்த நேரத்தில் அவனிடமில்லாத பொருளை அவர் கேட்கவில்லை. அவனை வருத்த அவர் விரும்பவில்லை. அதனாற்போலும், 'ஒன்றியபடி நின் புண்ணியமனைத்தும் உதவுக' என்று கேட்டார். கன்னன் உளமகிழ்ந்தான். தன்னிடம் உள்ள பொருளையே அவரும் கேட்டார் என்று பூரித்தான். 'நான் செய்த புண்ணியமெல்லாம் உனக்குத் தந்தேன் ஏற்றுக்கொள்' என்று சொல்லிக்கொண்டே அப்பிராமணரின் கேள்விப்படி தாரைவார்த்துக் கொடுத்தான்.

அவனின் கொடைத்திறனால் மகிழ்ந்த கிருஷ்ணர்—கிழப்பிராமணன், பதிலுக்குப்பதில் தானும் அவனுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்றெண்ணி 'நீ வேண்டும் வரங்களைக்கேள், தருகிறேன்' என்றார். 'நான் செய்த கொடையினால் என்னை உலகத்தவர் போற்றவேண்டும், எனது புகழ் உலகமெங்கணும் பரவ வேண்டும். அடுத்த பிறப்பில் நான் இராசகுடும்பத்திலேயே பிறந்து உலக முழுவதையும் ஆளவேண்டும்.' என்று கன்னன் கேட்டானல்லன். ஆனால் கொடைவெறி — கொடைப்பித்துக் கொண்ட அவன், "அல்லல்வெவ்வினையா லின்னம் உற்பவமுண்டாயினும், ஏழேழு பிறப்பும் இல்லையென்றிரப்போர்க் கில்லையென்றுரையா இதய நீ அளித்தருள்" என்று தான் கேட்டான்.

இந்த வார்த்தையைக் கேட்ட எந்த அறிஞனது உள்ளமும் உருகாமல் இருக்குமா? கிருஷ்ணரின் மனம் உருகிவிட்டது. தமது பிராமண வடிவத்தை நீக்கிவிட்டு, அவனை மார்புறத் தழுவிக் கண்ணீர் சொரிந்து, "நீ எத்தனை பிறவி யெடுத்தாலும், அப்பிறவியில் செல்வம் பெருகி, இரப்போர்க்கீந்து முடிவில் முத்தியுமடைவாயாக" என்று கூறியருளினார்.

கன்னனின் ஆவி, அதிக களிப்புடன், தோழற்காகத்தான் செய்த தியாகத்தை நினைத்து உவகையுடன்—அவனின் உடலைப் பிரிந்திருக்கும்.

## 36-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை

மொத்த வியாபாரத் தகுதி உரை (லைசன்ஸ்) உடைய இறக்குமதியாளர் தங்கள் விண்ணப்பத்தில் தொகுதியாகவோ பகுதியாகவோ உள்ள தங்கள் மொத்த வியாபாரச் சத வீதத்தைக் குறித்து உள்ளார்கள். சிறப்பான சில காரணங்களை முன்னிட்டுக் கட்டுப்பாட்டதிகாரியிடம் இருந்து குறைத்து விற்க விசேஷ உத்தரவு பெற்றிருந்தாலல்லாமல் இறக்குமதியான வார்னாமாவில் சொல்லப்பட்ட சத வீதத்துக்குக் குறையாமல் மொத்த வியாபாரத்துக்கு விற்பார்கள். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கைத்தறிப்புடவைகள் மட்டில் இக் கட்டளை இப்போதிருந்து ஒரு கிழமைக்குள் வெளியாக்கப்படும் புதிய விலைக்கட்டளை உடைய சரக்குகளுக்கே உரியது அதாவது 1946ம் ஆண்டு மேமீ 20ந் திகதிக்குப்பின் புகையிரதத்துக்கோ கப்பற் கொம்பனிக்கோ ஒப்படைத்த அல்லது இந்தியாவிற் கொள்முதல் செய்த புடவைகளாம்.

குறிப்பு: இறக்குமதியாளர்க்குச் சில்லறை வியாபாரம் இன்மையால் ஏற்படும் நட்டத்தை நிறைவாக்க புதிய விலைக் கட்டளையில் மொத்த வியாபார இலாபங் கூட்டப்பட்டுளது. கரை சேர்க்கத் தீர்மானிக்கப்பட்ட விலையிலும் 20/- ஏற்றம்.

ஈ. றொட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 24-5-1946 [2788]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னாகம்: விய, வைகாசி ௨௦


## கட்சிமுறை அரசியல்

இதுவரையில் சனநாயக அரசியல் முறை உண்மையில் நிலைபெறுதிருந்த இலங்கையில், கட்சிமுறை அரசாங்கத்தைச் சடுதியில் நிறுவிவிடச் சில தலைவர்கள் முயற்சி செய்கின்றனர். இம்முயற்சி ஏற்றதென்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார். தேசத்தின் முன்னேற்றத்துக்கும் பொதுமக்கள அரசியல் ஞானத்தை இனிது பெறுதற்கும் அரசியற் கட்சிகள் நாட்டில் நிலைபெற்றுவருவது இன்றியமையாததே. பொதுமக்களாயுள்ளோர் கட்சிகளின் கொள்கைகளையும் நோக்கங்களையும் ஆராய்ந்து நோக்கி எது சிறந்ததோ, அதையே மேற்கொள்வது வழக்கம். ஆனால், இதுவரையும் அரசாங்கசபை அங்கத்தவர் நிரந்தரமாகக் கைக்கொண்ட கட்சி எதுவுங் கிடையாது. தமது சுயநல வேட்கையை எவ்வகையில் நன்கு உறுதிப்படுத்தலாமோ, அதையே விரும்பி நின்றனர். வேறு சிலர் தாம் சுயேச்சைக் கட்சியினரென்றும் ஒருவிதமாகச் சமாளித்து வந்தனர்.

இப்போது, ஒரு சிலர் சேர்ந்து "ஐக்கிய தேசியக் கட்சி" என்ற நாமத்துடன் ஓர் கட்சியை நிறுவ எத்தனஞ் செய்கின்றனர். இக்கட்சியின் பிரதம நோக்கம் சாதிபேதம், வகுப்புவாதம் என்னும் குறுகிய நோக்குடைய பிரச்சினைகளை முற்றாயொழித்து, நாட்டின் முன்னேற்றத்தையும் பொருளாதார நிலை சீருறுதலையும் இலக்காகக்கொண்டு உழைப்பதேயாகும். வகுப்புவாதிகட்கும், சுயநல வேட்டைக்காரருக்கும் இக்கட்சியில் இடங்கிடையாது. இப்புதியகட்சி கௌரவ சேனநாயக்காவின் ஆதரவில் சிருட்டிக்கப்படுகின்றதென்பது வெளிப்படை. சமீபத்தில் இக்கட்சியின் நோக்கங்களை திரு மொலமுறே அவர்கள் பல சொற்பொழிவுகளில் எடுத்து விளக்கி, யாவரையும் அதிற் சேரும்படி வேண்டினர். இக்கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் எவ்வளவுக்கு ஆதரவு ஏற்படுமென இப்பொழுது திடமாகக் கூறவியலாது. பல காரணங்கள்பற்றி, இதுவரையும் சிங்களத் தலைவர்களில் அவநம்பிக்கை கொண்டிருந்த தமிழர், அதைச் சடுதியில் மறந்து ஒத்துழைக்க முற்படுவரென்பதும் விரைவில் கூறிவிட முடியாத விஷயமாகும். இலங்கைத் தேசியமகாசபையினரே இதில் அதிகமாகச் சேர்கின்றனர்.

இது ஒருவாருக, அபேதவாதிகள் (Communists) திரு. சேனநாயகா அவர்களை ஒருபுறத்தில் ஒதுக்கிவிடுவதாகக் கங்கணங் கட்டி நிற்கின்றனர். முதலாளிகளின் (Capitalists) ஆட்சியை ஒழித்து, சமத்துவமான அரசியலை ஸ்தாபிக்க வேண்டுமென்பது இவர்களின் நோக்கமாகும். மேலும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரும் மறுபடி முன்னுக்கு வந்து ஏதோ செய்யப்போவதாக அட்டகாசங் கொள்கின்றனர். தமது கட்சியின் பேரால் அங்கத்தவர்களைத் தேர்தலுக்கு நிறுத்தவேண்டுமெனவும் கூறுகின்றனர். இவைகள் ஒருபுறமாக, ஒரு கட்சியையுஞ் சாராது சுயேச்சைக் கட்சியினரெனச் சொல்லி முன் வந்தால், வாய்க்குமெனச் சிலர் தம்முள் முடிவு செய்கின்றனர். இவ்வாறுக நம் நாட்டின் அரசியல்நிலை மிக்க மயக்கமும் தயக்கமுமாயிருக்கின்றது. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை மேற்கொண்டு, பொதுமக்களின் வாழ்க்கையை உயர்ச்சியடையச் செய்யும் எக்கட்சியையுங் காணேம். தாந்தாங்கொண்ட கொள்கைகளையே விடாப்பிடியாக மேற்கொள்ளுதல் நீதியன்று. தேசநலத்தை நாடிச் சிறிது விட்டுக்கொடுத்தால் பெருநன்மையாகு மல்லவா?

இலங்கைத் தேசம் தம்முடையது, தம் நாட்டிற்காகத் தொண்டாற்ற வேண்டுமென்ற உண்மையான விசுவாசத்துடன் எவ்வித தியாகத்தையுஞ் செய்யச் சித்தமுடையோர் எத்தனைபேர் இலங்கையில் இருக்கின்றனர்? பதவிகள், ஸ்தானங்களை நாடி விருதாவில் வேட்டையாடுபவரே எங்கும் மலிந்துள்ளார். தேர்தற்காலஞ் சமீபித்ததும், புதிய கட்சிகளும் தலைவர்களும் தோன்றி, ஏழைப் பொதுமக்களை ஏமாற்ற முற்படுகின்றனர். அரசியல் ஞானமில்லாத பாமரரும் பணம் பறிக்கும் சுயநலப் புலிகளும் தருணம் பார்த்திருந்து கிளம்பிவிடுகின்றனர். தேசத் தொண்டாற்றிவரும் தலைவர்களும் கட்சிகளும் சாதாரண காலத்திலும் நிலைத்திருப்பின், இச்சமயத்தில் இவ்வித அலங்கோலங்கள் நிகழமாட்டாவே. உதாரணமாக: இந்தியாவில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டுள்ள மதிப்பும் ஆதரவும் எவ்வளவாகும்? காங்கிரஸ் சபையென்றால் தொண்டும் தியாகமுமென்பதே பொருளாகின்றது. தேசநலத்தை நாடுவோர் அக்கட்சிக்கே தமது ஆதரவை அளிப்பார். அவ்வித கட்சி இலங்கையில் இதுவரையில் இல்லாதது பெரிய தீமையேயாகும். இலங்கைத் தேசிய மகாசபை அந்நிலையை அடையாதமைக்குச் சிங்களத் தலைவர்களே பெரும்பான்மையும் பொறுப்பாளராவர்.

இனியாவது, நமது தலைவர்கள் தம்மைத் திருத்தி நடத்த முன்வரக்கூடாதாவென்று கேட்கின்றோம்? தேசிய வாதத்தை உபதேசித்துக்கொண்டு, வகுப்புத் துவேஷம் பாராட்டி நிற்கும் வரையும், நாட்டில் ஒற்றுமையும் செல்வ விருத்தியும் எப்படிக் கைகூடும்? இந்தியாவிலுள்ள பண்டிதர்நேரு, சர்தார் படேல், மகாத்மாகாந்தி முதலிய தலைவர்களின் கொள்கைகளையும் போக்கினையும் சிறிதாவது கைக்கொண்டு ஒழுகக்கூடாதா? அத்துடன் சிறுபான்மை வகுப்பினரும் நீடித்துத் தமது பிடிவாதத்தைச் சாதித்து நிற்பதால், அடையும் பயன் ஒன்றுமில்லை. மற்றைய கட்சியினருடன் ஒத்துழைப்பினன்றித் தேசமுன்னேற்றம் தடைப்பட்டுக் கொண்டேவரும். புதிய அரசியற்றிட்டப்படி திரு. பொன்னம்பலமவர்களது கோஷ்டியினர்க்கு மீட்சி கிடையாதாயிற்று. ஐம்பதுக்கைம்பது முதலிய பிரச்சினைகள் யாவும் முற்றாக அரசினரால் கைவிடப்பட்டன. இன்னும் இடமுண்டென வீண் கனவுகாணாது முன்னேற்றக்கட்சியுடன் ஒத்துழைப்பதே நலம். வகுப்புவாதத்தை முற்றாகக் கைவிடின், நாட்டின் சேமம் உறுதியடையும். வேண்டுமாயின் சில பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவோர் கட்சியை நிறுவி, அதை நிலைபெறச் செய்ய வியலாதா? பாமர சனங்களைத் தட்டி எழுப்ப வகுப்புவாதத்தைத்தான் மந்திரமாகக் கொள்ள வேண்டுமா? நாணமின்றி இந்த இழிந்த வழியைக் கைவிடாது கட்டித் தழுவுவதால், வரும் பயன் என்னையோ?

### மிக அநியாயமே!

அரசினர் வெளியிட்ட சம்பள அறிக்கையை உற்று நோக்குமிடத்து பொதுவாக எல்லா அரசாங்க உத்தியோகத்தர்களும் வேதன உயர்வைப் பெறுகின்றனர். ஆனால், ஆசிரியர்களோ தாம் எதிர்பார்த்திருந்த பிரகாரம் நன்மையை அடையாதுபோனதோடு மிக்க திகிலை உண்டாக்குகின்றது. மிக்க பொறுப்புள்ள கடமையை ஏற்று நடத்துபவர் ஆசிரியர்கள் போல் வேறெவராவது உளரா என்று கேட்கின்றோம். ஆசிரியர் அளவுகடந்த சலாக்கியங்களைப் பெறுகின்றனரென்றும் அவர்கள் வேதன உயர்வை நாடுவது முறையன்று என்றும் சிலர் அறியாமையால் வாதிக்க எழுந்துள்ளார். ஒரு நிமிடத்துக்காவது தமது கடமையைப் பாராமுகஞ் செய்ய ஆசிரியர்க்கு இடமுண்டா? எத்தனையோ விகிதமான மூளை வன்மையும் விவேகநிலையுமுள்ளமாணவருடன் ஆசிரியர்கள் நாள்தோறும் பயில வேண்டியவராகின்றனர். கந்தோரில் மேசையிலிருந்து சமாளித்து விடுவதுபோன்ற வேலை ஆசிரியர்க்குக் கிடையாதே. இதனை உணரின் மற்றைய உத்தியோகப் பகுதியினரைப் போல வாவது ஆசிரியர்கள் வேதனமும் உயர்த்தப்படவேண்டுமென்பதை எவரும் அங்கீகரிப்பர். சுயபாஷா வித்தியாசாலையிற் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் வேதனமும் புதிய திட்டப்படி சிறிதாவது உயர்த்தப்படாதிருப்பது பெருந்தவறாகும். இவ்வாசிரியர் செய்ய வேண்டிய வேலையை நேரே ஒருவர் தான் செய்தால் அல்லது செய்யுங்கால் பார்த்து நிற்பின் இவ்வித தவறான முடிவுகள் செய்யமாட்டார். ஆகவே அரசாங்கசபையினர் இவ்விஷயமாக வேண்டிய திருத்தங்கள் ஏற்படும்படி செய்வாராக. வாழ்க்கைக்கேற்ற சம்பளம் வழங்கப்படின் [illegible] ஆசிரியர்கள் இத்தொழிலை நடத்தமுன் வராதொழிவரே.

# பாதை ஓரத்தில்

★

பாட்டைசாரி

புதிய சம்பளத் திட்டம் எவ்வித கஷ்டமுமின்றி அரசாங்க சபையில் நிறைவேறிவிட்டது. சேர் ஒலிவர் தமது வேலைப்பாடு வெற்றியளித்திருப்பதைக் கண்டு பரவசமடைந்திருப்பார். அதிகமான சம்பளம் பெற்றுச் சொகுசான வாழ்க்கையை நடத்துபவர்களுக்குச் சம்பள உயர்வு சோம்பலை அதிகப்படுத்திச் சீவியத்தைக் குசாலாக்கப் போகின்றது. ஆனால் உண்மையாகவே வாழ்க்கையிற் கஷ்ட மனுபவிப்பவர்களைப் புதிய சம்பளத் திட்டம் கைதூக்கிவிடவில்லை. அரசாங்க நிர்வாகத்துக்கு உயிர் போன்ற அநேகரை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் புதிய சம்பளத் திட்டம் குதிரைப் பாய்ச்சலிற் பறக்கின்றது. சுவபாஷா ஆசிரியர்கள் கரடியாகக் கத்தியபோதிலும் அரசாங்கம் அசைந்தபாடில்லை. ஸ்ரீ கன்னங்கரா இதற்கு என்ன பதில் கூறித் தப்பிக்கொள்ளப் போகின்றாரோ தெரியவில்லை. உள்ளவனுக்குக் கொடுக்கப்படும், இல்லாதவனிடமிருந்து அவனிடம் உள்ளதும் எடுக்கப்படும் என்ற உண்மையைப் புதிய சம்பளத் திட்டம் இலங்கை மக்களுக்கு அழகாக எடுத்துக் காட்டியிருக்கின்றது.

### வெட்கமான வேலை

இலங்கையின் கௌரவம் சதா குறைந்துகொண்டே வருகின்றது. அத்துடன் அடிமை மனப்பான்மையும் நன்றாகத் தடிக்கின்றது. ஊர் திரும்ப விரும்பிய இலங்கைப் பல்கலைக் கழகத்து உப அத்தியட்சகர் டொக்டர் ஜென்னிங்ஸ் அவர்களை இங்குள்ளவர்கள் சிலர் இழுத்துப் பிடித்து மறித்திருக்கின்றனர். போதாக்குறைக்கு அவருடைய சம்பளத்தையும் பல்கலைக்கழக மன்றம் தாராளமாக உயர்த்தியிருக்கின்றது. இலங்கையில் ஏகாதிபத்தியக் கோட்டைக்கு மெருகு கொடுத்துத் துலங்கச் செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கும் டொக்டர் விரைவில் நாட்டைவிட்டுக் கிளம்புவது மிகவும் விரும்பத்தக்கது. அவர்தான் போக விரும்பினாலும் அப்படிச் செய்ய வேண்டாமென்று ஒற்றைக் காலில் நிற்கின்றனர் இங்குள்ள பிற்போக்காளர். இந்த இலட்சணத்தில் இலங்கைக்கு விமோசனம் ஒரு போதும் கிடைக்கப்போவதில்லை.

### அடிமைகள் சபை

சோல்பெரித் திட்டத்துடன் இலங்கையில் இரண்டாவது சபையுந் தோன்றப் போகின்றது. இதை அடிமைகளின் சபை யென்றே கூறிவிடலாம். சேர் பட்டம் பெற்றிருக்கும் அநேகர் இம்மன்றத்தை அலங்கரிக்கப் போகின்றனர் என்று எங்கும் ஒரே கதை. சேர் துரைசுவாமி அவர்கள் புன்னகை தவழும் முகத்துடன் இங்கு தலைமை வகிப்பார் எனத் தெரிகின்றது. அப்படியானால் தெரிவுக்கு நிற்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படமாட்டாது. மொலமுரே அவர்களுக்கும் இது நன்மையாகின்றது. இவர் எவ்வித எதிர்ப்புமின்றி முதலாவது சபைக்குத் தலைவராகலாம். ஒருமுறை தலைவரானாற் சதாகாலமுந் தலைவர்தான் என்பார்கள். அதேபோல இரு தலைவர்களும் தலைமைப் பதவியைப் பற்றிப் பயப்பட வேண்டியதில்லை. இத்தனைக்கும் ஏகாதிபத்தியம் வாழவேண்டும்! இவர்களும் அடிமைகளாகத் திகழ வேண்டும்!!

### ஆசிரியர்கள் தயார்

வட இலங்கை ஆசிரியர் சங்கம் வியாபார சங்கமாகப் பதிவுசெய்துவிட்டது. இருக்கின்ற தலையிடிகளுடன் இலங்கை அரசாங்கத்துக்கு இன்னுமோர் பெரிய தலையிடி சேர்ந்திருக்கின்றது. சமூக வாழ்வில் முக்கியமான ஒரு ஸ்தானத்தை வகிக்கும் ஆசிரியர்களைப் புறக்கணிப்பதும் அவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கச்செய்வதும் இலங்கை அரசாங்கத்தின் பரவணிக் குணமாகிவிட்டது. புதிய சம்பளத் திட்டத்தில் ஆசிரியர்களின் சம்பளவு உயர்வு கவலைக்கிடமானது மன்றி அவர்களின் சுயமரியாதையுமே பாதிக்கப்பட்டுள்ளது. சரி, ஆசிரியர்கள் இனி 'வேலை நிறுத்தம்' என்ற ஆயுதத்தைப் பிரயோகித்துத் தங்களின் நியாயமான கோரிக்கைகளைப் பெறப் போகின்றனர். இவ்வளவு காலமாக தூக்கத்திலிருந்த ஆசிரியர்கள் இப்போது தங்கள் உரிமைகளுக்காக வாதாட முன்வந்திருப்பதைக் கண்டு ஜனநாயக உலகம் ஆனந்தமடைகின்றது!

### தாய்மொழிக்கு மதிப்பா?

இலங்கைப் பல்சலைக்கழகம் ஏற்படுத்தியிருக்கும் தமிழ்-சிங்கள விசேஷவகுப்புகளுக்கு நூற்றுக்கு அதிகமானோர் விண்ணப்பஞ் செய்திருக்கின்றனர் எனத்தெரிகின்றது. இதற்கான பிரவேசச் சோதனை இம்மாதம் மூன்றாந் திகதி பல்கலைக்கழகத்தில் நடைபெறும். தாய்மொழியை வளர்ச்சியுறச் செய்வதற்காகவே இம்முயற்சியென்று கூறப்படுகின்றது. தமிழ்வகுப்பு மூன்றுவருஷகாலம் பயின்று தேறுபவர்களுக்கு **வித்வான்** பட்டம் வழங்கப்படும். இலங்கை இந்தியாசம்பந்தமான கலாசாரத் தொடர்புகளையும் பழைய பணப்பாடுகளையும் அறிந்துநாடுகலைவளம் பெற்று விளங்குவதை யார்தான் விரும்பமாட்டார்கள்.

### இசைவாணியின் பெருந்தன்மை

கோகில கான இசைவாணி யாழ்ப்பாணம் வருகின்றார் என்பதையறிந்து ஏற்கனவே ஜனத்திரள் புகைரதஸ்தானத்தை முற்றுகையிட்டது. ரயில் வந்து நின்றதுதான் தாமதம் வண்டியைச்சுற்றி ஜனங்கள் திரண்டுவிட்டனர். அம்மையார் இவர்களுக்குப் புன்னகை பூத்த முகத்துடன் காட்சி யளித்தபோது மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. இத்துடன் நின்றுவிடாமல் **"பாருக்குள்ளே நல்ல நாடு"** என்ற பாரதியாரின் பாடலையும் பாடிக் கூடிநின்ற மக்களைப் பரவசப்படுத்தினார். விலைமதிக்க முடியாத இசைச் செல்வத்தை தாராளமாகப் புகைரதஸ்தானத்தில் அவர் வாரி இறைத்த பெருந்தன்மை மக்களுக்குப் பெருநிதியாகவிருந்தது. வள்ளன்மைக்கு இருப்பிடமான அம்மையாரின் உதாரகுணம் யாழ்ப்பாண மக்களின் உள்ளங்களையெல்லாங் கவர்ந்து அவர்களின் கௌரவத்துக்கும் அன்புக்கும் பாத்திரமாக்கிவிட்டதே!

### யாழ்ப்பாண ஆசிரியர்களும் சம்பளத் திட்டமும்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில், வடமாகாண ஆசிரிய சங்கத்தின் அவசியகால கூட்டம் சென்ற வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் ஆசிரியரின் சம்பளத் திட்டம் சம்பந்தமாக ஒரு கண்டனப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. ஆசிரியர்கள் யாவரும்தொழிற் சங்கச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கமாகச் சேர்ந்துகொள்ள வேண்டுமெனவுந் தீர்மானிக்கப்பட்டது.

### தாய்ப்பாஷைமூலம் கல்வி

சென்னை மாகாணக் கல்வி மந்திரி திரு. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் பத்திரிகைக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் அம்மாகாணத்திலுள்ள எல்லா உயர்தர பாடசாலைகளிலும் போதனைகள் தாய்ப்பாஷைகள் மூலம் நடைபெறவேண்டுமென வற்புறுத்தியிருக்கிறார்.

'நாட்டின் அந்தஸ்தை உயர்த்தத் தாய்ப்பாஷைக்குமுக்கியத்துவம் அளிக்கப்படவேண்டியது மிகவும் அவசியமானதாகும். உண்மையில் அவசியம் ஏற்பட்டால் மட்டுந்தான் ஆங்கிலபாஷையில்போதிப்பதற்கு அனுமதி அளிக்கப்படும்.'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இந்தியா

# பிரிட்டனின் 'வாக்குறுதிப் பத்திரம்'

## வெள்ளை அறிக்கைபற்றி காந்திஜி கருத்து

**பிரிட்டனின் வெள்ளை அறிக்கையை ஆராய்ந்த காந்திஜி, கடந்த வார ஹரிஜன் இதழில் 'ஆராய்ச்சி' என்ற தலைப்பில் எழுதிய தலையங்கம் இங்கு தரப்பட்டிருக்கின்றது.**

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக மந்திரி தூதுக்கோஷ்டியாரும் இராஜப்பிரதிநிதியும் வெளியிட்டுள்ள அறிக்கையை நான்கு நாட்களாக துருவித் துருவி ஆராய்ந்த பின்னும் இப்பொழுதுள்ள சந்தர்ப்பத்தில் இதை விட அதிக சிறப்பான அறிக்கையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்டிருக்க முடியாது என்ற என்னுடைய எண்ணம் உறுதிப்படவே செய்கின்றது. அதை அறிந்துகொள்ளா விட்டால் அது நம்முடைய பலவீனத்தையே காட்டும். காங்கிரஸ் மகாசபையும் முஸ்லிம்லீகும் ஒத்துப் போகவுமில்லை, போகவும் முடியாது. நம்மிடையேயுள்ள வித்தியாசங்கள் எல்லாம் பிரிட்டிஷாருடைய சிருஷ்டிகளே என்று நாம் இந்தச் சமயம் முட்டாள்தனமாக எண்ணி நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதானால் நாம் பெரும் பிழை செய்பவர்களாவோம். தூதுக்கோஷ்டியார் இங்கிலாந்திலிருந்து இவ்வளவு தூரம் வந்திருப்பது இந்த வித்தியாசங்களைத் தங்கள் நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்காகவன்று. அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியை அதி சீக்கிரத்தில் எளிதான முறையில் நீக்கிவிடுவதற்கான மார்க்கத்தைக் கண்டு பிடிப்பதற்காகவே வந்திருக்கிறார்கள். அப்படியில்லை என்று நிரூபிக்கப்படும் வரை அவர்களுடைய பேச்சில் நம்பிக்கை வைக்கக்கூடிய அளவு நாம் தைரியமுடையவர்களாக இருக்கவேண்டும். வீரமானது ஏமாற்றுகிறவன் ஏமாற்றும் அளவே செழித்து வளர்வதாக இருக்கின்றது.

### போகவே விரும்புகிறார்கள்

ஆயினும் நான் அவர்களைப் பாராட்டுவதைக் கொண்டு பிரிட்டிஷாருக்கு நலமாயிருப்பதெல்லாம் இந்தியர்க்கும் நலமாகவேயிருக்கும் என்று கூறுவதாக எண்ணிவிடவேண்டாம். அவர்களுக்கு அதிக நன்மை தருவது நமக்கு அதிகந் தீமை தருவதாகக் கூட இருக்கலாம். நான் கூறுவதன் பொருள் அடியிற் காண்பவற்றிலிருந்து தெளிவாகுமென்று எண்ணுகின்றேன்.

அறிக்கையை வெளியிட்டுள்ளவர்கள் தங்கள் கருத்தையெல்லாம் பரிபூரணமாகக் கூற முயன்றிருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவுக்குச் சுதந்திர சாஸனம் தயாரிக்கும் விஷயத்தில் இரண்டு கட்சியாரையும் ஒன்று சேர்ந்து வேலை செய்வதற்கு எது குறைந்தபட்ச தேவையோ அதைத் தாங்கள் பலருடன் பேசி வந்ததிலிருந்து அறிந்துகொண்டார்கள். அவர்களுடைய ஒரே லட்சியம் எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகப் பிரிட்டிஷ் ஆட்சியை முடித்துவிடுவதேயாகும். தங்கள் முயற்சியால் கூடுமானால் உள்நாட்டு யுத்தம் என்று சொல்லக்கூடிய அளவில் சச்சரவுகள் நேராதபடி இந்தியாவை ஏக ஐக்கிய தேசமாக இருக்கும்படி செய்துவிட்டுப் போகவே விரும்புகிறார்கள். எப்படியானாலும் போய்விடவே விரும்புகிறார்கள்.

தூதுக்கோஷ்டியார் இரண்டு கட்சியாரையும் கலந்து பேசுவதற்காக ஸிம்லாவில் கூட்டிவைத்தார்கள். அது அவர்களுக்கு எப்படிச் சாத்தியமாயிற்றோ அதை அவர்கள்தான் சொல்ல முடியும். ஆனால் இரண்டு கட்சியாரும் எவ்விதமாகவும் ஒத்து வர முடியவில்லை. ஆயினும் தூதுக்கோஷ்டியார் சிறிதும் சோர்வடையாமல், டில்லிக்கு வந்து பிரிட்டிஷாருடைய கண்காணிப்போ, செல்வாக்கோ எதுவுமில்லாத இந்தியச் சுதந்திரச் சாஸனத்தைத் தயாரிக்கக்கூடிய அரசியல் நிர்ணய சபையை நிறுவுவதற்கான நோக்கத்துடன் கூடிய ஒரு சிறந்த அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்கள்.

### கட்டாயம் எதுவும் இல்லை

இந்த அறிக்கை வேண்டுகோள் விடுப்பதாகவும், புத்திமதி கூறுவதாகவும் இருக்கிறது. அதில் கட்டாயம் எதுவுமில்லை. மாகாணச் சட்ட சபைகள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதும், தேர்ந்தெடாதிருப்பதும் அவர்களுடைய இஷ்டத்தையே பொறுத்தது. தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளும் அரசியல் நிர்ணய சபைக்குப் போகவுஞ் செய்யலாம். போகாமலும் இருக்கலாம். அரசியல் நிர்ணய சபை கூடி அறிக்கை கூறுவதற்கு மாறான முறையில் காரியங்களை நடத்தத் தீர்மானிக்கவுஞ் செய்யலாம். நம்மைக் கட்டுப்படுத்துவதெல்லாம் நம்முடைய தற்கால நிலைமை ஒன்றேயாகும். தனியாக வோட் செய்வதானது இரண்டு முக்கியமான கட்சியார்களையும் கட்டுப்படுத்துவதும், அரசியல் நிர்ணய சபை குலைந்துபோகாமல் இருப்பதற்காகவன்றி வேறெந்தக் காரணத்துக்காகவுமன்று. இதை எழுதும்போது நான் மறுபடியும் அறிக்கையை எடுத்துக் கவனமாகப் படித்தேன். நம்மைச் சட்டப்படி கட்டாயப்படுத்தக்கூடியது ஒன்றுமேயில்லை என்ற முடிபுக்கே வந்தேன். நம்மைக் கட்டாயப்படுத்தக்கூடிய சக்திகள் நம்முடைய கௌரவம், அவசியம் ஆகிய இரண்டுமட்டுந்தான்.

அறிக்கையில் கட்டாயப்படுத்தும் பாகமானது பிரிட்டிஷ் அரசாங்கஞ் செய்து தீரவேண்டியது இதுவென்று கூறுவதேயாகும். அதனாற்றான் பிரிட்டிஷ் தூதுக்கோஷ்டிப் பிரதிநிதிகள் நால்வரும் தங்கள் அறிக்கையை வெளியிடுமுன் பிரிட்டிஷ் மந்திரி சபை பிரிட்டிஷ் பார்லிமெண்டு இரண்டின் பரிபூரணமான அனுமதியையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணுகின்றேன்.

### வாக்குறுதிப் பத்திரம்

அவர்களுடைய அறிக்கை பிரிட்டிஷ் ஆட்சியைத் துறந்துவிடுவதற்கான பிரதம அறிகுறியாக இருப்பதால் அவர்கள் நம்முடைய மனமார்ந்த பாராட்டுதலுக்கு உரியவர்கள் ஆவார்கள். ஆட்சி பரிபூரணமாக நீங்கிவிடுவதற்கு இன்னும் பல செய்யவேண்டியிருப்பதாற்றான் நான் இதை "வாக்குறுதிப் பத்திரம்" என்று கூறுகிறேன்.

இந்தியா தானாகவே யாதொரு நிர்ப்பந்தமுமின்றி அறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தபோதிலும், இந்தியாவிலுள்ள கட்சிகள் நிர்ப்பந்தத்தின் மேல் செய்வதைவிடக் கூட அதிகமாகத் தானாகவே மனமொப்பிச் செய்யக்கூடிய அளவு நல்ல கட்டுப்பாடும் பொறுப்புணர்ச்சியுமுள்ள ஸ்தாபனங்களாக இருப்பதாகத் தூதுக்கோஷ்டியார் எண்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Read
'The Kesari'
NATIONALIST ENGLISH WEEKLY
Voice of Progressive Lanka
National Independence
Social Emancipation
Cultural Renaissance
WILL BE ITS WATCH WORDS
SUBSCRIPTION RATES:
Annual: Rs. 7-50; Six Months: Rs. 4-00
Single Copy -/15 Cts.
The Manager, *KESARI*, Chunnakam, Ceylon.

கலாபவனம்

## கோகிலகான இசைவாணி

# ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி

## இசைக் கச்சேரி

★

— அரியரத்தினம் —


யாழ்ப்பாணத்தைக் கடந்த வாரம் இன்னிசை வெள்ளத்தில் மிதக்கச் செய்த தனிப்பெருமை கோகிலகான இசைவாணி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுக்கே உரியது. பரமேஸ்வரக் கல்லூரி வெள்ளிவிழா வைபவத்தின் சிகரஜோதியாகப் பிரகாசித்த ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியின் இன்னிசைக் கச்சேரியை அனுபவித்துக் கொண்டிருந்த ஸ்ரீ நடேசன் அவர்கள் இசைவாணியை நவீன சரஸ்வதி என்று கூறிவிட்டார். பாரத புண்ணிய பூமியிற் கரைபுரண்டு ஓடும் இசை வெள்ளம்பெருக்கெடுத்துத்தமிழ் மணங்கமழும் யாழ்ப்பாணத்தையும் தாவிப் பிடித்துவிட்டதென அவர் உணர்ச்சியுடன் அன்றுகுறிப்பிட்டதை ஒருவரும் மறக்க முடியாது.

ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மிக்கெனவே அற்புதமாக அமைந்திருக்கும் அழகிய பாணி அனைவரையும் வசீகரித்துவிடுகின்றது. சுத்தானந்த பாரதியாரின் "அருள் புரிவாய்" என்ற உருப்படியுடன் இசைவாணியின் அமிர்தகானம் ஆரம்பமாயிற்று. பொதுவாக, எதுகுலகாம்போதி ராகத்தைச் சுவை குன்றாது இனிமையுடன் பாடுவது அவ்வளவு எளிதல்ல ஏனைய ராகங்களிலும் பார்க்க. அது இனிமை மிகுந்த தென்பதைக் 'காலைத் தூக்கி நின்றாடுந் தெய்வமே' என்ற தேன் ஒழுகுந் தமிழ்க் கீதம் எடுத்துக் காட்டியது. பாடலும் அதற்கென அமைந்த ராகமும் சபையோரை மெய் மறக்கச் செய்தது. கணிப்பான மதுர சாரீரத்தில் எதுகுலகாம்போதியை சுவை ததும்பச் சுகமாகக் கையாண்டார். ஹரி காம்போதி ராகத்தில் 'வண்டாடுஞ் சோலை தனிலே' என்ற பாடலை ரஸம் குன்றாமல் இனிமையாகப் பொழிந்து கொட்டினார். பல்லவியிற் சுரம் பாடிய இடம் மிக வினயமாகவும், அபூர்வமாகவும் இருந்தது. ஜில்ஜிலுப்பான ராக சஞ்சாரத்துடன் அமைந்த இக்கீதம் நறுமணங் கமழும் பூங்காவில் தம்புராநாதத்துடன் வண்டுகள் ரீங்காரஞ் செய்வதுபோலிருந்தது. இங்கு ராகத்தின் லாவண்யமும், கருத்தமைவும், அழுத்தமாகவும், தெளிவாகவும் விளங்கின. பைரவிராக ஆலாபனையின் சாரீரக் குழைவும், கமகங்களும் சபையைப் பரவசத்தில் அமிழ்த்திவிட்டன. சஞ்சாரத்துடனும், நூதனமான சங்கதிகளுடனும், அபார விறுவிறுப்புடனும் பிர்க்காப் பொழிவுடனும் உதிர்ந்துகொண்டிருந்தது. தர்பாரில் அமைந்த 'யோசனா கமல லோசனா' என்ற தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனை உயர்தரமானது. தர்பார் கிருதியிற் சங்கதிகளைச் சரமாரியாகப் பிழிந்ததுடன் நில்லாது ஸ்வரம் போடுங் காலத்தில் அதன் நாத இனிமையை அலட்சியமாக அள்ளி வீசினார். சங்கராபரண ராக ஆலாபனைக்கு அமைந்த அருணாசலக் கவியின் 'யாரோ என்று எண்ணாமலே' என்ற கீர்த்தனை அன்று உச்ச நிலையை அடைந்தது. அபூர்வ ஸ்வரமாரியைக் கொட்டிச் சபையோரின் கரகோஷத்தையும் பெற்றார். அழுத்தமான கமக இழைப்புகளுக்குங் குறைவு ஏற்படவில்லை.

ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியின் தானமும் பல்லவியின் எடுப்பும் ஒரு தனிச் சிறப்புவாய்ந்தன. தோடி ராகத்தைக் கையாண்ட முறையே தனி. பிர்க்காப் பொழிவும் அநாயாசமான சஞ்சாரங்களும் அபாரம்.

இதர வகைகள் என்ற துக்கடாக்களில் "காற்றினிலே வருங் கீதம்" என்ற மீராவின் அமிர்தகானம் உண்மையாகவே காற்றினிலே மிதந்து வருவதுபோலவேயிருந்தது. நெஞ்சை அள்ளும் முறையில் திவ்வியமாக இக்கீதத்தை இசைத்துச் சபையோரை ஆனந்தக் கடலில் ஆழ்த்திவிட்டார்.

"ஆடுராட்டே" சுதந்திர தாகத்தை ஊட்டியதுடன் நகைச்சுவையுடனுந் ததும்பியது. 'ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே' என்ற மகாகவி பாரதியாரின் அடிகள் வயலின்வாசிப்புக்கு இதமாகவிருந்தன. செந்தமிழ்த் தீஞ்சுவையுந் தேசபக்தியுங் கலந்தோடும் 'செந்தமிழ் நாடெனும்' என்ற பாடல் தேன்மாரியோலிருந்தது. இதற்கும் மேலாகப் 'பால் நினைந்தூட்டும்' என்ற திருவாசக இராக மாலிகை உண்மையாகவே அவருடைய நயமான இசைஞானப் பண்பைப் பூரணப் பொலிவுடன் எடுத்துக் காட்டியது. என்ன? பக்திமேலீட்டினாற் சபை அப்படியே சொக்கிவிட்டதே! சிம்மேந்தர மத்திமம், கேதாரகௌளம், மோகனம், காபி முதலிய ராகங்கள் முத்து முத்தாக உதிர்ந்தன. திருவாசகத்துக் குரித்தான மோகனத்தில் யானைனைத் தொடர்ந்து' என்ற அடியைப் பாடி முடிக்கும்போது பக்தியின் உச்சத்தைத் தொட்டுவிட்டார் என்றே கூறவேண்டும்.



சுமார் மூன்றரைமணி நேரத்துக்கு அதிகமாக நிகழ்ந்த ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியின் இன்னிசைக் கச்சேரி ஆரம்பத்திலிருந்து முடிவுரை தேவகானம் போலச் சுவை யூட்டிக்கொண்டேயிருந்தது. பாவப்பொழிவுடனும் இராகத் தெளிவுடனும் நெஞ்சை அள்ளும் பாணியில் நாத வெள்ளத்தை வாரி வாரி இறைத்தார்.

பக்கவாத்தியத்தைப் பற்றிக் கூறாதுபோனால் விமர்சனம் நிறைவுபெற முடியாது. தஞ்சாவூர் சங்கர ஐயர் அவர்கள் பிடில் வாசிப்புச் சிறப்பாக அமைந்தவிடத்தும், அவருடைய ஞான விசேடத்தை அனுபவிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படவில்லை. ஸ்ரீ கோவிந்த ராஜப்பிள்ளை அல்லது ஸ்ரீ சௌடையா அவர்களின் அருவிப் பெருக்கம்போன்ற பிடில் வாசிப்பு கச்சேரியை இன்னும் அற்புதமாக்கியிருக்குமென்பது யாழ்ப்பாண கலா ரஸிகர்களின் அபிப்பிராயம்.

கல்பாத்தி இராமனுதன் அவர்கள் ரஸிகர்களின் பாராட்டிற்குப் பாத்திரமானவர். அவர் மிருதங்கத்திற் பாடுகின்றார் எனக் கூறினால் அது மிகையாகாது. ஸ்ரீ ராமனுதனின் கீர்த்தன எடுப்புகள் பாடகருக்குக் கஷ்டத்தை உண்டாக்காது சுகமாக அமைந்தன.

கடம் வித்வான் ஆலங்குடி ராமச்சந்திரன் யாழ்ப்பாண மக்களுக்குப் புதியவரல்லர். இருவருடங்களுக்கு முன்னரும் இங்குவந்து ஓர் இசைக் கச்சேரியைச் சோபிக்கச் செய்தவர். மக்களின் மதிப்பையும் பெற்றவர். கடத்தில் அவர் நிகழ்த்தும் நயமான வேலைப்பாடுகள் சபையோரைக் கவர்ந்துவிடுகின்றன. மிருதங்கத்தில் தாளங்களை அமைப்பதுபோற் கடத்தில் அமைக்கமுடியாது. இருந்தும், ஆலங்குடி ராமச்சந்திரன் இதில் நல்ல பரிச்சியம் பெற்றிருக்கின்றார். சிலவேளைகளில் மிருதங்கத்தை அனுபவிப்பதா, அல்லது கட வித்துவானின் வாசிப்பைச் சுவைப்பதா என்ற நிலை ஏற்பட்டுவிடுகின்றது. ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி கூட ஓர் இடத்தில் கடவாத்தியத்துக்குச் 'சபாஷ்' போட்டுவிட்டார்.

சகல அம்சங்களிலும் நிறைவு பெற்ற இந்த இன்னிசைக் கச்சேரியை அனுபவிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்த ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி அவர்களின் பதி ஸ்ரீ சதாசிவம் அவர்களுக்குப் பொதுவாக இலங்கையுஞ் சிறப்பாக யாழ்ப்பாணமும் கடமைப்பட்டிருக்கின்றன. இசைவாணியின் இலங்கை விஜயம் பரமேஸ்வரக் கல்லூரியின் வளர்ச்சி நிதியைத் தாராளமாக வளஞ் செய்திருப்பதுடன் அக்கல்லூரிக்கும் பெருமையை அளித்திருக்கின்றது.

மேடையின் அமைப்பும் கலைப்பொலிவுங் குறிப்பிடத்தக்கன. ஒளி வெள்ளத்துக்குள் தமது இனிய கானத்தைப் பிழிந்து எம்மையெல்லாம் இசைப்பிரவாகத்தில் திளைக்கச்செய்த கலைச் செல்வி ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி அவர்களை ஈழநாடு வாழ்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலாயா அன்பர்களுக்கு—XII "சுயா"

# 'பார்லிமென்ற்' தெரிவு

**நான் ஒரு வகுப்புவாதி**யல்ல. தேசியவாதி. ஆனால் என் வகுப்புவாதம் தேசியவாதமெல்லாம், என்னளவில்தோன்றி மறைந்துவிடக் கூடியனவே தவிர, இப்பொழுது தேசியகட்சியைத் தோற்றுவித்திருக்கும், திருவாளர் சேனநாயக்காவாவது, அவரின் புதிய சிஷ்யப்பிள்ளைகளாவது என்னிடம் ஓடிவந்து, "நீயும் ஒரு தேசியவாதியாச்சே! நீ எங்கள் பக்கம் சேர்ந்துகொண்டாற்தான், எங்களுக்கும், எங்கள் தேசத்துக்கும் சுபீட்சமுண்டாகும்" என்றுசொல்லி என் காலைக் கையைப் பிடிக்கக்கூடிய அத்தனை பெரிய மனுஷனல்லநான். பின் இதை ஏன் சொன்னேனென்றால்: அரசாங்கசபைத் தெரிவு காலங்களில் "நாங்கள் வானத்தை வில்லாக வளைப்போம்; மணலைக் கயிறாகத் திரிப்போம்; சமுத்திரத்தை வற்றச் செய்வோம்" என்றெல்லாம் பொது ஜனங்களிடம் கயிறுதிரித்து, அவர்கள் 'வோட்'டைப்பெற்று, அரசாங்க சபைக்குப் போனதும் கொழுத்த சம்பளத்தையும் வேறு சலுகைகளையும் பெற்று, இராஜபோகமனுபவித்துக்கொண்டு, தம்மையனுப்பிய, ஏழை மக்களைப்பற்றிய நினைவேயில்லாம லிருக்கின்ற, இந்த வகுப்பு வாதிகளையும், தேசியவாதிகளையும் பற்றிப் பாரபட்சமில்லாது சில கட்டுரைகள் உங்களுக்கு எழுத வேண்டுமென்றிருக்கின்றேனாகையால், நான் எந்தவாதம் பிடித்தவன் என்பதை முதலில் உங்களுக்குச் சொல்லி வைக்கவேண்டாமா?

எல்லாரும் ஆங்கிலங்கற்ற பிரபுக்களாயிற்றே, அவர்களெல்லாம் தமிழ்ப் பேப்பரில் எழுதுபவைகளையா படித்துக் கொண்டிருக்கப் போகின்றார்கள்? என்று கேட்பீர்களாக்கும். நான் எழுதுபவைகளையெல்லாம் அவர்கள் கட்டாயம் படித்துவிட வேண்டுமேயென்ற கவலை எனக்குத்துளிக்கூடக்கிடையாது; இரண்டு போத்தல் சாராயத்துக்கும், ஐம்பது நூறுரூபாக் காசுக்கும் நாக்கைச் சப்புக்கொட்டிக்கொண்டு, யோக்கியதாம்சங்களைக் கவனியாது, அவர்களுக்காக மாரடிக்கும், இங்குள்ள அவர்கள் ஏஜண்டுகளாவது இதைப் படிக்கமாட்டார்களா? படித்து அவர்களுக்குச் சொல்லமாட்டார்களா? அந்த ஏஜண்டுகள்கூட இதைப் படியாது விட்டாலும் விடட்டும், பொது ஜனங்களாவது இதைப் படித்து இனிமேல் இந்த ஏமாற்றுக்காரப் பிரபுக்களுக்கு நல்லபாடம் கற்பிக்கட்டுமே என்று எண்ணிக் கொண்டுதான் இதை எழுதத் தொடங்கினேன்.

சோல்பரி கமிஷன் வந்து போனதாகவும், அது தயாரித்து அனுப்பிய, அரசியற் திட்டத்தை அரசாங்க சபை ஏற்றுக் கொண்டதாகவும், என் முதலாவது கட்டுரையில் உங்களுக்கு எழுதியிருந்தேனல்லவா? அந்த அரசியற் திட்டப்படி, இந்த நாற்பத்தாறு மாண்டின் முடிவோடு, அரசாங்கசபையென்ற பெயரே அடியோடு அழிந்தொழிய, அந்த இடத்துக்குப் 'பார்ளிமென்ற்' என்ற பெயரோடு புதிதாக ஒன்று முளைக்கப்போகின்றது. 101 பெயருக்கு இந்தப் 'பார்ளிமென்றில்' அடிக்கப்போகின்றது அதிஷ்டம். அந்தச் சோல்பரிக் கமிஷனில் யாரும் செட்டிமார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் வந்தார்களோ என்னவோ தெரியாது, நூற்றொன்று என்று 'பார்ளிமென்ற்' அங்கத்தவர்கள் தொகையை ஒற்றைவிழ வைத்துவிட்டார்கள். செட்டிமார் புதிதாக எந்த வியாபாரத்தைத் தொடங்கினாலும், ஒற்றைவிழத்தான் முதலை விடுவார்களாம். இதனால் 'பார்ளிமென்ற்' ஐயும் ஒரு வியாபாரஸ்தலம் என்று நான் சொல்வதாக நீங்கள் எண்ணிவிட வேண்டாம், அங்கத்தவர் தொகை ஒற்றைவிழ இருப்பதால் செட்டிமார் வியாபாரத்துக்கு முதலை விட்டதுபோல இருக்கின்றது என்று சொன்னேனே தவிர வேறல்ல.

**ஏறக்குறையப் பத்துவருஷங்**களுக்கு முன் நடந்த, அரசாங்க சபைத் தேர்தல் வைபவத்தைப் பற்றி எனக்கு நல்ல ஞாபகமிருக்கிறது. சாராயப் போத்தல் மூட்டைகளை ஏற்றிக்கொண்டு கார் ஓடினது; அதைப் பொலிஸ் துரத்தினது; தக்க மனுஷர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இரவோடிரவாக இவ்விரண்டு போத்தல் சாராயவீதம் கொண்டுபோய் ஒழித்தது. அபேட்சகர்கள் வீடுகளிலும், அவர்கள் ஏஜண்டுகளின் வீடுகளிலும் கள்ளுமிடாக்கள் பொங்கி வழிந்தது, போதைமிஞ்சிச் சிலர் தெருக்கான்களில் தலையைக் குத்திக்கொண்டு துணிமணியின்றிக் கிடந்தது. கார்ச்சாரதிகள், ஜனங்களை ஏற்றிக்கொண்டு போன கார்களைத் தங்கள் வீடுகளிற் கொண்டுபோய் விட்டுவிட்டுப் பானைகளிற் பெற்றோல் எடுத்து வைத்தது. அபேட்சகராய் நின்றவர்கள் சிலர் குடும்ப சமேதராய் வீடுகள்தோறும் சென்று கும்பிடு போட்டு வோட் பிச்சை கேட்டது. சில அபேட்சகர்கள் கண்கட்டு ஜால வித்தை செய்தது. சிலர் அலங்காரப் பிரசங்கம் செய்தது எல்லாம் எனக்கு ஞாபகம் எல்லாம்முடிந்து அரசாங்கசபை அங்கத்தவர்களாகி விட்டார்களோ, தம்மை அனுப்பிய பொது ஜனங்களையும் மறந்து விட்டார்கள். ஏறக்குறையப் பத்துவருஷ காலங்களாய் அரசாங்க சபையிலும், அலங்கார மாளிகைகளிலும், இராஜோபசார விருந்து கேளிக்கைகளிலும் தங்கள் காலத்தைப்போக்கினார்களே தவிர, தங்களை அனுப்பிய, யாழ்ப்பாணப் பொதுஜனங்களுக்கு ஏதும் நல்லது செய்ய வேண்டுமென்று, அவர்கள் திமிர் பிடித்த மூளையில் ஏறவில்லை. ஜனங்களுக்கு நன்மை செய்வதை அறியாதிருந்தார்களே தவிரத் தங்கள் காரியங்களை அவர்கள் மறந்துவிடவில்லை. தங்களாட்களுக்கு உத்தியோகங்கள் தேடிக்கொடுத்திருக்கின்றார்கள்; தங்கள் கடன்கண்ணிகளை அடைத்து விட்டார்கள். இவ்வளவுக்காவது அவர்களை அங்கத்தவர்களாக அனுப்பியது நல்லதுதானே.

தாங்கள் சென்ற அரசாங்க சபைத் தேர்தற்போது செய்த வாக்குறுதிகளையும், செய்த சத்தியங்களையும் புறக்கணித்துவிட்டு, இந்திரபோக மனுபவித்துக் கொண்டு கிடந்ததையும், யாழ்ப்பாண மக்கள், தங்கள்மேற் தீரா அருவருப்புக் கொண்டிருக்கிறார்களென்பதையும் அவர்கள் இதுவரை அறிந்தே யிருப்பார்கள். இந்தமுறைத் தெரிவின் போது யாழ்ப்பாண மக்கள், தங்களுக்கு வால்கட்டி ஆகாயத்திற் பறக்கவிடப் போகின்றார்களென்பதையும் அவர்கள் அறிவார்கள். கிராமங்களில், கிராமப் பொதுஜனங்களோடு தினமும், உடன்பிறந்தாரைப்போலப் பழகிவரும், தமிழ் ஆசிரியர்கள், தங்கள்மேல் மாறாத வைராக்கியம் கொண்டுவிட்டார்களென்பதையும், பொது ஜனங்களின் மத்தியில், இந்த ஆசிரியர்களின் செல்வாக்கு அதிகமாயிருப்பதால், இவர்கள் பகையை மேற்கொள்வது தம்மால் ஆகாததொன்றென்பதையும் இவர்கள் தெரியாமற் போகார்கள். தாங்கள் பகைகொண்டு விட்டோமென்பதை ஊர்ச்சிதம் செய்பவர்களைப்போல, "எங்கள் வேதன விஷயத்தில் நீங்கள் வம்புசெய்துவிட்டீர்கள்; வாருங்கள் இம்முறை தெரிவுக்கு; அம்பலத்தில் விட்டு உங்கள் மானத்தை [illegible] உங்களுக்கு நல்லபுத்தி கற்பித்து நாங்களும் மனுஷர் என்பதையும், எங்களுக்கும் செல்வாக்கு உண்டென்பதையும் உங்களுக்குக் காட்டி உங்களை அனுப்பிவைக்கின்றோம்; எங்களுக்கு மாறாக எங்கேனும் புறக்டர் அட்வக்கேட்மாரைப்பிடிக்கலாம் என்றுமாத்திரம் எண்ணி நீங்கள்வந்து அவர்கள் பிழைப்பிலும் மண்ணைப் போட்டுவிடாதீர்கள்." என்று சொல்பவர்களைப்போல ஆசிரியர்கள் அங்கங்கே சங்கங்களைக் கூட்டி இவர்களுக்குச் சவால் விடுக்கத் தொடங்கி விட்டார்கள். இம்முறை திரிசங்கு சொர்க்கம்போலாகிவிட்டது இவர்கள்பாடு. அங்கே பொன்னம்பலம் கட்சி தோற்று விட்டது. ஆகையால் அதோடு நிற்பது இவர்கள் லாபத்துக்கு நட்டம். இங்கே நாட்டு மக்கள் வெறுக்கத்தொடங்கிவிட்டார்கள். ஒன்றும் போக வழி தெரியாமல் இந்த அப்பாவிகள் தவிக்கும்போது, சமய சஞ்சீவி போல, சேனநாயகா தோற்றுவித்த 'தேசியக்கட்சி' இவர்களுக்கு அபயமளித்தது. பத்து வருஷங்களுக்குமுன் நடந்த அரசாங்கசபைத் தெரிவின்போது, சிங்களவரை வெட்டவேணும், கொத்தவேணும் ஐம்பதுக்கைம்பது பெற்றே தீரவேண்டும் என்று எங்களையெல்லாம் ஏமாற்றி எங்கள் வோட்டைப் பெற்றீர்களே! இப்பொழுது சிங்களவர்களோடு ஏன் சேர்ந்து கொண்டீர்கள் என்று கேட்டுவிட்டால் என்ன செய்வது? இராச தந்திரிகளல்லவா; நாங்கள் கேட்கு முன்பதாகவே இவர்கள் காரியத்திற் தொடங்கி விட்டார்கள். "பத்துவருஷகாலமாக எங்களுக்கு என்ன செய்தீர்கள்? ஏன் சிங்களவரோடு சேர்ந்து கொண்டீர்கள்?" என்ற பொது ஜனங்களின் இரு ஆட்சேபங்களுக்கும் தாமாகவே "என்ன செய்வோம். இதுவரையும் சிங்களவரோடு மாறுபட்டு நின்றோம். அதினால் எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை; இனி ஒன்றுசேர்ந்து உழைப்போம் என்று பார்க்கின்றோம" என்றுசொல்லி இனிவரும் தெரிவுக்கும் கண்ணாம்பூச்சி விளையாட்டு விளையாடத் தொடங்கிவிட்டனர். பொன்னம்பலம் தன் ஐம்பதுக்கைம்பதைச் சீமைக்கரை வரையும் தூக்கிக்கொண்டு போயும் பிடியாமற் போகவே பொன்னம்பலம் கட்சியில் நின்ற இவர்கள் செத்தநாயில் உண்ணிகழன்ற மாதிரி அவர் காங்கிரஸில் நின்று நழுவத் தொடங்கினார்கள். நழுவிய இவர்கள் போக்கிடமற்றுத் தவிக்கும்போது ஆனசமயத்தில் இவர்களைக் கைதூக்கி விட்டதுபோல சேனநாயக்காவின் தேசியக்கட்சி தோன்றிற்று அழையாவிருந்தினர்களாக அதிற்போய் ஒட்டிக்கொண்டார்கள். "சோழியன்குடுமி சும்மா ஆடுமா" அதுபோல இவர்கள் குடுமியும் சும்மா ஆடக்கூடியதா? இங்கே யாழ்ப்பாண மக்களின் வெறுப்பு வளர்ந்துவிட்டது; அங்கே பொன்னம்பலம் கட்சி தோற்றுவிட்டது. இடையில் "பார்ளிமென்ற்" தெரிவில் ஜெயங்கொள்ள வேண்டுமென்ற ஆசை. இப்படி இவர்கள் மனம் ஊசலாடிக் கொண்டிருக்கும்போது, சேனநாயக்கா அவர்கள், 'பார்ளிமெண்டறி' தெரிவில் தான் தான் முதல்மந்திரியாய் வருவேனென்றும், மற்ற மந்திரிகளை நியமிப்பது தன்கைக்குள் என்றும் என்னை வெறுத்தீர்களோ தலையை மழுங்க அடித்துக்கொண்டு அரசியலிலிருந்து சந்நியாசம் வாங்க வேண்டியதுதான் என்றும் இவர்களை வெருட்டாமல் வெருட்டத் தொடங்கிவிட்டார். மந்திரி பதவிக்கு நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு திரியும் இவர்களுக்கு அங்கத்தவர் பதவிக்கே சாஸ்திரம் கேட்க வேண்டும்போல் வந்துவிட்டால் நெஞ்சில் இடி விழாதா? இந்த நோத்தில் பருமரத்தைச் சுற்றிக் கொண்டாற்தான் கடசி, நியமன அங்கத்தவர்களின் பெயர் கவர்ணரிடம் கொடுபடும்போது அதனுள் [illegible] இவர்கள் எண்ணியிருக்கவேண்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்

# அகில இலங்கைச் சைவ மகாநாடு

"ஈழகேசரிப்" பத்திராசிரியர் அவர்கட்கு,

ஐயா!

இதனுடன் யான் அனுப்பும் கடிதம், இந்துசாதனப் பத்திரிகாசிரியர் அவர்களால் தமது பத்திரிகையில் பிரசுரிக்க மறுக்கப்பட்டது. ஆனபடியால் பரந்த நோக்குடைய தங்கள் பத்திரிகையில் அதைப் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
**இ. கந்தையா**

"இந்துசாதனப்" பத்திராதிபர் அவர்கட்கு,

ஐயா!

**அகில இலங்கைச் சைவ** மகா நாட்டைப்பற்றித் தங்கள் பத்திரிகையில் 26-4-46 எழுதும்பொழுது திரு மு. ஞானப்பிரகாசம் B. A., B. Sc அவர்களின் பிரசங்கத்தை வியந்து எழுதினீர்கள். ஆயின், அன்று பிரசங்கம் கேட்ட பலருக்கு எடுத்துக் கொண்ட விஷயத்துக்குச் சற்றும் பொருத்தமில்லாத துவேஷம் நிறைந்த பேச்சாகவே புலப்பட்டது. என்பதை அதிக தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். "அன்பினால் இன்பம் ஆர்வார்" என்ற பொருள்பற்றிப் பேசத் தொடங்கியவர், இராமகிருஷ்ண சங்கத்தைச் சுட்டி முகத்தைச் சுழித்து, நெற்றியைச் சுருக்கிக் கூறிய வார்த்தைகள் கேட்டிருந்தவர்கள் பலரின் மனதை வேதனைப்படுத்தின. உலகம் போற்றும் அவதார மூர்த்தியும் உத்தமருமாகிய ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சதேவரின் பேரால், அவர் தம் சீடரும் அகில உலகையும் தன் அன்பினால், அறிவினால் ஈர்த்த உத்தம லட்சிய புருஷனுமான சுவாமி விவேகானந்தரால் ஸ்தாபிக்கப்பெற்று, அரும்பணிகளை ஆற்றி வரும் சங்கத்தை இவர் தூஷித்தது எக்காரணம் பற்றியோ தெரியவில்லை.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் வாழ்ந்தது இந்த நூற்றாண்டில்தான். ஏதோ பழங்கதையல்ல, அன்னை காளிதேவியின் தரிசனங் கிடைக்கப்பெற்றுப் பேரின்ப அநுபூதியென்னும் ஞானப்பாலை உண்டு மகிழ்ந்த இப்பெரியார் உலக மக்களுக்கே ஒரு பொது நெறி காட்டினர். தாயைப் பிரிந்த சேய்போல, ஊனுருகி, உளமுருகி, உணர்வுமுருகி அம்பிகையை அழைத்த குரு மூர்த்தியைத் திருஞானசம்பந்தப் பெருந்தகையுடன் ஒப்பிட வேண்டாமா? வேதாந்த, சித்தாந்த சமரச நிலை கண்ட தாயுமானவரைப் போற்றும் நாம், பல சமய சமரசங் கண்ட உத்தமரைப் போற்ற வேண்டாமா? நவயுகம் அமைக்க வந்த சமய குரவர்கள்தான் ஸ்ரீ இராமகிருஷ்ணரும், ஸ்ரீ விவேகானந்தரும் என்றால் பிழையாமோ?

பௌத்த, கிறீஸ்தவ, இஸ்லாமிய மதங்களை ஏற்றுக்கொள்ளும் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம் சைவ சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லையாம். இக்கூற்றுக்கு இவருக்கு ஆதாரங்கள் எங்கு கிடைத்தனவோ? இவர் கூற்று ஆதாரமற்றதென்பதற்கு ஷெ சங்கத்தாரால் வெளியிடப்பெற்று, சைவ சித்தாந்த மகா சமாஜத்தால் நடத்தப்படும் "இளம் சைவப் புலவர்" தேர்வுக்குப் பாடமாக வைக்கப்பெற்ற "திரு அருள் மொழி"யே போதிய சான்றாகும். மேலும் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்துச் சுவாமி யொருவரையே, 'சைவ சித்தாந்த தத்துவத்தைத் தமிழறியாப் பிறரும் அறியும் வண்ணம் ஆங்கிலத்தில் எழுதத் திருவாவடுதுறை ஆதீனத்தார் வேண்டிக் கொண்டார்கள்' என்பதை அறிவுலகம் அறியாதா? தென்னிந்தியாவுக்குச் சென்றே "சைவ சித்தாந்தம் போதிப்பேன்" என்ற ஆசிரியர் இவற்றை அலட்சியம் செய்தாலும் அறிவுலகம் விஷயத்தை விளங்கிக்கொள்ளும். ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்துச் சுவாமிகள் பலர் விபூதி, உருத்திராக்கம் முதலிய சிவ சின்னங்களைப் போற்றி வருவதை யாமறிவோம். மிஷன் நடத்தும் பாடசாலைகளில் சைவமணம் பரிமளிப்பதை யார் அறியார்? மத வெறிபிடித்த சமயக்கணக்கருக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தில் இடமில்லை என்பது உண்மையே.

அடுத்த விஷயம், இலங்கை வித்தியாபகுதியாரின் சமய பாடத்திட்டம் பற்றியது. இப்பொழுது எஸ். எஸ். ஸி. பரீட்சைக்கு வைக்கப்பெற்றிருக்கும் நூல்களெல்லாம் சைவ சித்தாந்த நூல்களே. அப்படியிருக்க இவர் எதைப்பற்றிக் கண்டனஞ் செய்தாரென்பது புலப்படவில்லை. 'இளஞ் சைவப்புலவர்' தேர்வுக்கு 'திரு அருள்மொழி' வைக்கப்பெற்றிருப்பது இவர் ஆத்திரத்தைக் கிளறிவிட்டதோ?

இனிச் 'சைவர்கள் தங்களை 'இந்துக்கள்'' என்று கூறிக் கொள்வது சரியல்ல,வென்கிறார் திரு. ஞானப்பிரகாசம். நமது முன்னோர் தங்களை இந்துக்களாகவே கருதினரென்பது 'இந்துக் கல்லூரி,' 'இந்துசாதனம்' முதலிய பெயர்களால விளங்குகிறது. சைவ மகாநாட்டுக்குத் தலைமை வகித்த சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரமவர்கள் தாம் எழுதிய சைவ சித்தாந்த நூலுக்கு "Saiva School of Hinduism" என்ற பெயரே கொடுத்துள்ளார் முதல் இப்பெரியாருக்கு இவ்விஷயத்தைப்பற்றித் திரு. ஞானப்பிரகாசம் அறிவூட்டுவாராக.

"தொண்டு வாழ்க்கையை" ஆசிரியர் குறைந்தபடி என்று கூறினர். "என் கடன் பணி செய்து கிடப்பதே" "அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்னும் வாக்கியங்களை ஞாபகப் படுத்துகிறேன்.

ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனையும், நோக்கங்களையும் அறியாதவர்கள் நல்லாக அறிய முயல்வதை விடுத்துச் சபைகளில் சந்திகளில் கண்டிப்பது சரியல்ல. இத்துவேஷ மனப்பான்மைகளைக் களைந்தாலன்றி இந்நாட்டில் சமய விஷயமாக மாத்திரமல்ல, வேறு எவ்விஷயங்களிலும் நன்மை வருமெனக் காத்திருக்க முடியாது எந்நாட்டவர்க்கும் இறைவனாகச். சிவனை வணங்கும் சிவனடியார்களாகிய ஒரு கூட்டத்தினரை, இன்னொரு கூட்டத்தினர் துவேஷிப்பது அறிவுமல்ல, அழகுமல்ல, "Truth is one & sages call it by different names"

இங்ஙனம்
**இ. கந்தையா**
ஆசிரியர்

கொக்குவில்
2-5 46.

## 243-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

**17-6-45 க்குப் பின் பிறந்த குழந்தைகட்குப் புடவைக் கூப்பன் புஸ்தகம் வழங்கல்.**

1945ம் ஆண்டு ஜூன் மாதம் 17ந் திகதிக்குப்பின் கொழும்பு நகராண்மைக் கழகத்துள் பிறந்த குழந்தைகட்கு, பிறக்குந் தருணத்தில் பிறப்புப் பதிந்த பதிவுகாரர்களால் B 133ம் பதிவுமாதிரித் தாளில் கொடுக்கப்பட்ட பிறப்புப் பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டால், புடவைப் புஸ்தகம் கொடுக்கப்படும்.

2. 204வது புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தலின்படி இவ்வளவு காலமும் வேண்டப்பட்ட சிறப்பான பிறப்புப் பத்திரம் ஆவசியகப்படாது.

**ஈ. ஜெட்றிக்கோ**
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 11-5-1946 [2887]

# நொண்டி நாடகம்

அ. வி. ம.

வடமேல் மாகாணத்து மாதம்பைக்கும் அதற்கு அணித்தேயுள்ள மாரவிலுக்கும் இடையில் பெரியகுளம் (மகாவெல) என்றொரு குக்கிராமம் உளது. இது நீர்வளம் மிக மலிந்துள்ள நாடு. இதனை, வயல் நிலமும் பலவேலி கூடி அதிகம் அழகு படுத்துகின்றது. இதன் நீர்ப்பாகம் இந்து சமுத்திரத்துடன் கலக்கின்ற இடம் மட்டக்கொட்டுவ எனப்படும். இவ்விருகிராமங்களிலும் வடமேல் கரைத் தமிழர் குடியிருக்கின்றனர். இவர்கள் தெப்பம், பாதை, தோணி முதலியன கொண்டு மீன் பிடித்து வாழ்க்கையை நடாத்துவார்கள். சுற்றவிருக்கும் சிங்கள நாட்டார் தொடர்பினால் இவர்கள் வீட்டுப்பாஷை தமிழுடன் கலந்த சிங்களமாகி விட்டது. ஆயினும் வயோதிபருக்குச் சிங்களமோ முற்றாய்ப் பேசமுடியாது. 1912ம் ஆண்டு தொடக்கம் இக்குள்ள தமிழ் பாடசாலைகள் மூடப்பட்டுச் சிங்களப் பாடசாலைகள் திறபட்டுவிட்டன. பிற் சந்ததியார் சிங்களமே பேசுகின்றனர். இது சரித்திரம். இனி, இங்கே ஒரு சம்பாஷணை நடக்கிறது. இருவர் கட்கடைபுக்கு மறைந்து கட் புசித்து மகிழுகையில்:—

தோமஸ்: மச்சான் வாரு கள்ளுக்குடிக்கப்புவ.

அந்தோனி: எனக்கு வெறியா இருச்சடா.

தோமஸ்: சும்மா பாவம் காட்டாமல் வாவே..

கட்குதக்காரன்: கியட்டத வாக்கராண்ட?

தோமஸ்: குறைச்சாமல் பதினஞ்சு சதத்திக்கு,

அந்தோனி: இது புளிச்ச கள்ளடா மாதாவே. [இதற்கிடையில் அலோசியஸ் வருகிறார்]

அந்தோனி: அலோ! அலோ! வாங்கோ, என்ன இங்கைக்குக் காரியம் வந்த? எதுவும் வுமனுவைகளா! வாங்களே கொஞ்சம் கள்ளுப் பாப்பம்.

தோமஸ்: அவரு பெரியகையெடா அவரு, அரக்குக் காரியம் அடிக்கியா?

இனி, மூவருக்கும் கலை! அது ஏறியவுடன் ஒவ்வொருவரும் ஓவ்வோர் பாத்திரமாக நடிக்கிறார்கள்.

"ஐந்து கல்லால் ஒரு கோட்டை
—அந்த
ஆனந்த கோட்டைக்கு ஒன்பதுவாசல்
இஞ்சிக்கு ஏலங் கொண்டாட்டம்
—அந்த
எலுமிச்சம் பழத்திற்கு புளிப்புக்
[கொண்டாட்டம்"

என்றான் குதக்காரன். உடனே ஒருவன் நொண்டியாக ஒரு காலைத் தூக்கி நாட்டிய மாடிக்கொண்டு பாடுகிறான்.

"மலர்தங்கு மடமங்கை சூழ—இந்த
மண்டலந் தனில் வாழும்நொண்டியன்
[நானே.
உலகிற்பொய் பகருதற் கேதாஞ்சரி
—யொருவரும்
எனக்கிணை சரி நின்றிடாரே.
நித்தியம் பிரளிசெய்வோர்கள்
—தோழன்
பிறகாலே நரிபோலத் தொடர்வேன்.
புத்திகள்மிகச்சொல்லிக்கொடுப்பேன்
—தோழன்
புகுந்தவர் வீட்டுக்குள் புகுந்து
[கொண்டிருப்பேன்
சண்டைக்கு நான்என்ன நிகரோ
—வழிச்
சண்டைக்குப் பெண்கள்தான் என்ன
[நிகரோ.
கோடைக்கும் மாரிக்கும் தானே
—தண்ணீர்
குடித்துக் குடித்துச் சண்டை
[பிடித்து நிற்பேன்.
குளக்கட்டை தறிக்கநான் போனேன்
—அந்தக்
குளக்காரப்பயல்கண்டு துரத்திவந்
[தான்காண்.
வழுக்காலே விழுந்தோடிப் போனேன்
[அங்கே
வழுக்கி விழுந்து உழுக்கிச்சி அப்பா
[உழுக்கிச்சி அப்பா.

என்று தன் காலை நொண்ட, மற்றவன் பெண்வேஷம் போட்டுச் செட்டியார் ஒருவரின் பெண்ணாக நடிக்கிறான். அவனை நொண்டி பிடித்து இழுத்தான் கையில்!

செட்டிகுலப் பெண் பிறந்தேன்
[ஆதிதேவா—நான் ஒரு
சீமானை மண்டிசெய்தேன் ஆதிதேவா
மட்டளவில் லாதவனே ஆதிதேவா
—இந்த
வசையெனக்கு வந்ததென்னே
[ஆதிதேவா
எத்திசையும் கீர்த்தியாச்சே ஆதிதேவா
—நொண்டி
என்னைப்பிடித் திழுக்கலாச்சே
[ஆதிதேவா
தன்னையொத்த பெண்களெல்லாம்
[ஆதிதேவா—என்னைச்
சங்கையினம் பேசுவாரே ஆதிதேவா,
உந்தனருள் கூருமையா ஆதிதேவா
—உந்தன்
உபகாரம் வேணுமையா ஆதிதேவா.

(பெண் போகிறாள்)

இனி, மூன்றுமவன் செட்டியாராக வந்து நொண்டியைத் தன் சாக்கப்பையனுக்கி, பின் வருமாறு சொல்லுகிறான்:—

"பாரிலென் நேசமுள்ள
வல்ல சொக்கா — நான்
பயணம் வருமட்டும்
பல சரக்கு
இன்பமுடன் விற்றுக்கட்டிப்
பத்திரமாய் — விற்ற
நிலுவைப் பணமிங்கே
வைத்திருப் பாய்."

அதற்குக் கள்ளெண்ணமுடைய சொக்கன்:—

"ஐயா!
இதெல்லாம் சொல்லக்
கௌவையில்லை — உங்கள்
ஆச்சியைக் கூட்டிப்
போதல் செவ்வையல்ல
கண்ணுஞ் சுழிக்குதொரு
கனவும் கண்டேன் — அங்கே
கள்ளர்கள் தான்மிகுந்த
நாட தென்றேன்."

அதற்குச் செட்டி இடங் கொடுக்கவில்லை. பின்பு சொக்கன்:—

"மெய்ப்பொரு ளானதேவன்
எப்போதும் காப்பார்—ஏதும்
வினையும் வராமற்
போவீர் தப்பா துண்மை."

என்றுவிட்டு வேறு வழியால் சென்று செட்டியார் தம்பதிகளைக் குறுக்கிட்டுப் பாதையில் மின்னும் நொண்டி வேடத்தில் பிச்சை கேட்கிறான். (ஓர் ஆற்றங்கரை)

நொண்டி: "அப்பா நீ எங்கே போறீர் அறிமுகம்போலிருக்குதையா. ஆற்றங்கரை நொண்டி அலைந்துலைந்து கிடக்கிறதே." இதனைக் கேட்ட செட்டி இரங்கி மனைவியைப் பார்த்து:-

"அன்னமே பதங்கிளியே
அன்புள்ள மனையாளே
அந்தரிக்கிறானே நொண்டிவங்
திடட்டும்கூடி மடமாதே"

செட்டிபெண்:
பந்துபோல் முளியும் கள்ளன்
பார்வையுமே ஞானமுள்ளோன்
பாருலகில் ஒருபோதும் நம்ப
வொண்ணாது கேளையா."

செட்டி:
ஆயினும் காலற்ற நொண்டி
ஆனபடியாலிவனை—நாமே
அக்கரையில் சேர்த்து விட்டால்
புண்ணியமாம் பின்னாலே.

என்று சொல்லிப் படகிலேற்றி அக்கரை சேர்க்குமுன் நொண்டி செட்டியார் மனைவியைப் பிடித் திழுத்துவிட்டான்! பெரிய கலவரம் உண்டாகிவிட்டது. அக்கரைக்குச் சென்றதும் நீதி அரசர் பொன்னுக்கோன் மன்னன் இருந்தார். அவரிடம் வழக்குரைந்தாள் மனைவி.

"இடையர் குலத்திற் பிறந்த
மன்னனே நன்னனே கேளும்
அருள்கூரும் தயைதாரும்
தத்தளித்த நொண்டி தன்னைக்
கைகொடுத்துக் கரை
சேர்த்தேன் பார்த்தேன்,
அவன் இழுக்க மன்னனே!
என்னைப் பறிக்க மன்னனே!
தயை விரும்பினேன்.
எனது கற்பினுக் கிடர்நினைத்த
நொண்டி தூர்ச்சனன்
நன்றி கெட்டவன்
அறிகிலேன் ஐயையோ! பாலனே
எனைக் காப்பீர் பாலனே!
மணமுடித்த கணவனும் விகடமே
அறியான் எனக்குரையான்
அறிகிலேன் பாலனே பாலனே!
எனைக் காப்பீர் பாலனே!

(உடனே தண்டனை விதிக்கப்படுகிறது.) நொண்டியைச் சாக்கிற் கட்டிச் சரக்காக விற்க வேண்டும், என்றார் பொன்னுக்கோன் மன்னனும். செட்டியும் அப்படியே செய்து வேலையாள் முதுகிலேற்றி விலை கூறுகிறான்:-

"கொள்ளுவா ருண்டோ
கொள்ளுவா ருண்டோ—சரக்குகள்
கொள்ளுவா ருண்டோ
நல்ல சரக்குகள் —கொள்.
உங்களுக் கெனவேநல்ல
சரக்குகள் கொண்டுவந்தேன்
உள்ளபடியேசொல்லி ஒன்றிரண்டு
ஒட்டம்வைத்துத் தருவேன் (கொ)
வெள்ளைச்சரக்குப் பெருங்காயம்
பிள்ளைபெற்ற தாய்மாருக்கு
சுக்குமிளகுடன் உள்ளிமிளகு
ஊறுவா கறுவா
உண்டெனவே தாறேன்—வருவீர்
பெண்டுகளே வருவீர் (கொள்)
அங்கேயிருந்து
கொண்டுவந்தேன்—நானும்
ஆத்தைமாரே நீங்கள்
பார்க்கவோ போறீர்
உங்களிடத்தில் நான்பொய்
சொல்ல மாட்டேன்
உண்ணுணே கண்ணுணே பெண்
—ணுணே!

என்று சத்தியம் சொல்லச் சில் பெண்கள் [illegible] வாங்கிப் பங்கிட ஆரம்பித்தார்கள். சரக்கெல்லாம் நொண்டி[illegible] யாக மாறிவிட்டது! அவர்கள் கோபத்தில் நொண்டியை அடித்துப் பின்னும் சாக்கிற் கட்டி ஆற்றில் விட்டார்கள்! சில செம்படவர் கண்டு அவனைச் சாக்கினின்றும் மீட்டுத் துரத்தி விட்டார்கள்! அவன் தப்பினேன் தப்பினேன் என்று ஓடிவிட்டான்!


**SAMUEL SONS & Co., Ltd.,**

*HOSPITAL ROAD, JAFFNA*

T'GRAM: ECHIRON T'PHONE: 62

Head Office:- 371, OLD MOOR ST.,

COLOMBO

● இரும்பு
கம்பிகள்
கேடர்கள்
சிலாகைகள்
அச்சுகள்
தகடுகள்

○ நீர் இறைக்கும்
யந்திரங்கள்
குழாய்கள்
தாங்கிகள்

○ கல்வனைஸ்
தகடுகள்
தாங்கிகள்
வாளிகள்

● கைத்தொழிற்குரிய
ஆயுதங்கள் மற்றும்
கமத்தொழிற்
கருவிகளும்

● பித்தளை
தகடுகள்
பூட்டுகள்
பிணைச்சல்கள்

○ மைவகைகள்
மை எண்ணெய்
வாணீஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

**சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்**

ஆஸ்பத்திரிரோட் : : யாழ்ப்பாணம்

தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62

2782



உங்கள் பிற்கால சீவியத்திற்கு

**வழி தேடுங்கள்**

- உங்களால் இயன்றவரை மிச்சப் படுத்துங்கள்.
- மிச்சப்படுத்தியதை முதலீடு செய்யுங்கள்.

(1) "இல்லானை இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த தாயும் வேண்டாள்" என்ற முதுரைக் கிணங்கக் கைப்பொருளில்லானை உலகில் எவரும விரும்பார், தன்பிடிக்காரிகையும் வேண்டாள், ஈன்றெடுத்த அன்னையும் வேண்டாள். நாம் அரும்பாடுபட்டு உழைக்கும் பணத்தை இலகுவில் செலவழிக்கலாம். மிச்சம் பிடிக்க முடியாது.

(2) ஆக்கையோ நீரிற் குமிழி என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க எங்கள் உடம்பு எப்போது அழியும் என்பது தெரியாது. ஆகவே யாம் எடுத்த பிறவியின் நோக்கங்களுள் ஒன்றாய "பிற்கால சந்ததிக்குதவிபுரிதல்" என்னும் இலக்கைத் தேடி வைக்கவேண்டும்.

(3) செல்வமோ, "செல்வம் செல்வம்" என்ற வாக்கை சதா உச்சரித்துக்கொண்டு நிற்கும். ஆகவே நம் பிற்கால வாழ்விற்கோ அல்லது நம் சந்ததியாருக்கோ தேடி வைத்தல் எமது கடமைகளுள் ஒன்றாகும்.

ஆகவே உங்கள் சகோதரனுக்கிணையாய் இன்றியமையாத் துணைபுரிய முன்வந்துள்ள ரிறஸ்ற் (Trust Co. Ltd.,) கம்பனியில் உடனே சேருங்கள். உங்கள் மாதச் சம்பளம எவ்வளவு குறைவாகவிருந்தாலுஞ் சரி அதற்கு ஏற்ப மிச்சம் பிடிக்கக்கூடிய உதவியைப் புரிய இலங்கையிலே ரிறஸ்ற் கம்பனி ஒன்றே, முன்வந்திருக்கிறது. 100 ரூபாவிற்கு மேற்பட எவ்வளவிற்கும் நீங்கள் இதிலே இன்சூர் செய்யலாம். தாமதிக்காதீர்கள். உங்கள் காலத்தை வீண்போக்காதீர்கள். உடனே சேருங்கள்.

**ரிறஸ்ற் கம்பனி (Trust Co. Ltd.) யிலே ஏன் துணிவாகச் சேரலாம்**

(1) பங்காளர்களாற் கொடுக்கப்பட்ட திட்பமான மூலதனம்.

(2) காத்திரப்பிரகாரமாக ஏதாவது சம்பவித்தால் அதை ஈடு செய்வதற்கு எடுக்கக்கூடிய தனி மூலதனம். இது கொடுபட்ட பங்குகளுக்குப் புறம்பானது.

(3) உலகம் முழுவதிலும் ஏராளமான மூலதனத்தைக் கொண்டு இணைக்கப்பெற்ற ஆறு இன்சூரன்ஸ் கம்பனிகளுள் ஒன்றுடன் மீட்டுந் திடப்படுத்த ஒழுங்குசெய்யப் பெற்றுள்ளது.

(4) புதுப்பிக்கப்படும் 'பிறிமியம்' வருமானத்தில் மீட்டுந் திடப்படுத்துவதைக் கழித்து 50% மாதவீதம் அரசாங்கப் பொறுப்பில் சேமித்துவைக்கப்படுகிறது.

(5) ஆரம்பகாலந் தொடக்கம் தொழில் முறையில் முற்போக்கடைந்து செல்வதால் ஏற்பட்ட அனுபவம்.

**விபரங்கட்கு எழுதவும்:**

மா. நடராசா
வடமாகாணப் பிரதமப்
பிரதிநிதி
கந்தரோடை, சுன்னாகம்.

**The TRUST Co. Ltd.**
*83, Chatham St.*
Colombo.

[2889]


## 'பார்லிமென்ற்'தெரிவு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டும், சேனநாயக்காவின் கட்சியிற் சரணாகதியடைந்தார்கள். இப்படி ஒருசயத்தை எதிர் பார்த்திருந்த சேனநாயக்கா அவர்கள் இவர்களுக்கு அபயமளித்து "வாரும் என்ப்ரிய சிஷ்யப் பிள்ளைகளா நீங்களும் என் சொக்கப்பையன் மொலமுரே யுமாக யாழ்ப்பாணம் சென்று தேசிய ஞான மின்னதென்பதையே யறியாத உங்களூர் மூடச் சனங்களுக்கு ஞானோபதேசம் செய்யுங்கள். இடையிடையே உங்கள் காரியமாகவும் இரண்டொன்று சொல்லிவையுங்கள்" என்று சொல்லியனுப்பினாரோ என்னவோ தெரியாது இங்கே வந்து தேசியகட்சியைப்பற்றி எங்களுக்கு ஞானோபதேசம் செய்யத் தொடங்கி விட்டார்கள்.

தேசியக் கட்சியென்பது யாழ்ப்பாண மக்களாகிய எங்களுக்குப் புதியதொன்றல்ல. பத்துவருஷங்களுக்கு முன் நடந்த அரசாங்க சபைத் தேர்தற்போது, இவர்கள் சிங்களவர்களோடு மல்யுத்தம் செய்வோம் முஷ்டியுத்தம் போடுவோம் என்று சொல்லிப் பொது ஜனங்களின் வோட்டைப் பெற ஏமாற்றுவித்தை செய்த காலத்தில், "பெரும்பான்மைச் சமூகத்தோடு முட்டிக்கொள்வது புத்தியல்ல, ஐக்கியமாகப் போவதுதான் உகந்தது" என்று இவர்களுக்குப் புத்தி சொன்னோம். அப்போது இந்த ஞான சூனியக்காரர்களுக்கு நாங்கள் சொன்ன புத்திமதி ஏறவில்லை. இப்பொழுது தங்களுக்குப் புத்தி சொன்ன எங்களுக்கே புத்திசொல்ல வந்துவிட்டார்கள் இவர்கள். எவ்வளவு கேலிக்கூத்துப்பாருங்கள்.

### மலாய அன்பர்களே!

இப்பொழுது யாழ்ப்பாணமக்கள் நிற்கும் நிலை வேறு. "வரும் "பார்ளிமென்ற்" தெரிவுக்குத் தேசியவாதிகளையே அனுப்ப வேண்டுமென்று நாங்கள் விரும்பினால், பழைய தேசியவாதிகள் பலர் எங்களிடையே இருக்கின்றார்கள். அவர்களை நாங்கள் அனுப்புவோம், வகுப்புவாதிகளையே அனுப்ப விரும்பினாலும் நாங்கள் விரும்பியவர்களை அனுப்புவோம். ஆனால் காலத்துக்குக் காலம் கட்சிக்குக்கட்சி தாவி விளையாடும் பச்சோந்தி போன்ற இவர்களின் கூட்டுறவே எங்களுக்கு வேண்டாம். இனி இவர்களை எங்கள் பிரதிநிதிகளாக அனுப்பவே அனுப்போம்" என்று ஒரே பிடிவாதமா யிருக்கின்றார்கள். என்ன நடக்குமோ பார்ப்போம். தெரிவுகாலம் வரட்டும்.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest Circulation in Ceylon, India & Malay States

Vol. 16 | Chunnakam, Sunday, June 2, 1946 | No. 43

அச்சிலிருக்கும்
வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக
வெளியீடுகள்

1. நாலடியார் (1-6 அதிகாரங்கள் உரை, ஆசிரியர் வரலாறு முதலியவற்றுடன்)
2. நளவெண்பா (சுயம்வர காண்டம் 1—55 உரையுடன்)
3. கிருஷ்ணன் தூது விசேட உரையுடன்
4. கிராதார்ச்சுனீயம்

விரைவில் வெளிவரும்.
வேண்டுவோர் முன்னுடியே பதிவு செய்துகொள்ளவும்.

தனலக்குமி புத்தகசாலை
சுன்னுகம் : : இலங்கை

## புடவைக்கட்டுப்பாட்டு அறிவித்தல்

1946-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ந் திகதி துவக்கம் தொழிற் தேர்தற் பகுதியைச் சேர்ந்த பதிற் கட்டுப்பாட்டதிகாரி (Deputy Controller of Textiles Technical) யின் அலுவற்தானம நீக்கப்படுகின்றது.

அந்நாட்தொட்டு கூப்பன் வைப்பகம் (Coupon Bank) விலை அடையாளம் இடல் சம்பந்தமான கடிதங்கள் யாவும் முறையே பங்கீட்டு உதவிக் கட்டுப்பாட்டதிகாரிக்கும், விலை அடையாளம் இடும் உதவிக் கட்டுப்பாட்டதிகாரிக்கும், என். எஸ். எவ். பில்டிங். இல. 213 மெயின் வீதி புறக்கோட்டைக்கு அனுப்பப்படவேண்டும்.

இவ்வளவு காலமும் தொழிற் தேர்தற்பகுதியைச் சேர்ந்த கட்டுப்பாட்டதிகாரிக்கு அனுப்பிய ஏனைய வகைக் கடிதங்கள் எமக்கு தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

ச. ஞெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 30-5-1946 [2791]

## 17 நாட்களில் 4 பேர் மரணம்
### கிணற்றுள் வீழ்ந்து இறந்தனர்

அளவெட்டி என்னுமிடத்தில் சென்ற பதினேழு நாட்களுள் நால்வர் கிணற்றுள் வீழ்ந்து இறந்துவிட்டதாக ஒரு நிருபர் அறிவிக்கின்றார். இவர்களுள் மூவர் ஆண்கள்; மற்றவர் பெண். காரணம் யாதென்பது புலப்படவில்லையாம்.

நற் சுகத்திற்கு




எங்களிடம் P. S. R. சந்தனாதித் தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.

[2741]

## பிரிட்டனின் 'வாக்குறுதிப் பத்திரம்'

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ணியிருப்பது சரியே. அதனாலேயே பெதிக் லோறன்ஸ் பிரபு:—

"அந்த அடிப்படையில் அவர்கள் ஒன்று கூடுவார்களானால், அவர்கள் அந்த அடிப்படையை ஏற்றுக்கொண்டதாகவே அர்த்தமாகும். ஆயினும் ஒவ்வொரு கட்சியிலுமுள்ள பெரும்பாலான மெம்பர்கள் விரும்பினால் அவர்கள் அந்த அடிப்படையை மாற்றவும் செய்யலாம்.'

என்று ஒரு பத்திகை நிருபரிடம் கூறினார். அறிக்கையின் விபரங்களை நன்ருக அறிந்தபின் பிரதிநிதிகளானவர்கள் அடிப்படையை முக்கியமான கட்சிகள் மாற்றுவதற்கு அனுஷ்டிக்க வேண்டிய முறைப்படி நடந்து மாற்றினாலொழிய மாற்ருமல் ஏற்றுக்கொள்ள வேண்டும், என்று கூறுவதே அவருடைய கருத்தாயிருக்குமானால் அது முற்றிலும்சரியே.

### தூதுகோஷ்டியார் மத்தியஸ்தர்கள்

ஒன்றையொன்று எதிர்க்கும் இரண்டு மூன்று கட்சியார் கூடுவதானல் ஏதோ ஒரு அடிப்படையை ஒத்துக் கொண்டு தான் கூட முடியும். இந்தக்கட்சிகளுக்கு மதியஸ்தராக யாருமில்லாததால் அறிக்கையை வெளியிட்டவர்களே தங்களை மத்தியஸ்தர்களாக நியமித்துக் கொண்டிருக்கிருர்கள். அதனால் அவர்கள் ஏதேனும் ஒரு குறைந்த பட்ச அடிப்படையை வகுத்துக்கொடுத்தால்தான் கட்சியார்கள் ஒன்று கூடுவார்கள் என்று எண்ணியே இந்த யோசனையைக் கூறுவதோடு அதைக கட்சியார்கள் தங்கள் கூட்டுச் சம்மதத்தின்பேரில் ஏற்கவோ, குறைக்கவோ, மாற்றவோ செய்யலாம் என்றும் கூறியிருக்கிருர்கள்.

### தொகுதி பிரிக்கும் யோசனை

அறிக்கையில் இதுவரையுள்ள பாகம் முற்றிலும் ஏற்கக்கூடியதாகவே இருக்கின்றது. ஆனால் மாகாணங்கள் விஷயத்தில் அவர்கள் கூறும் யோசனையாது? சீக்கியர்களுக்குப் பஞ்சாப்ஒன்றுதான் அவர்களுடைய தாய்நாடு, அப்படியிருக்க அவர்கள் தங்கள் விருப்பத்திற்கு மாருக புதிதாக உண்டாக்க எண்ணும் "பி" ராஜ்யத்தைத் தங்கள் தாய்நாடாக எண்ணுவதெப்படி? அதேபோல் விருப்பத்துக்குமாருக எல்லைப்புற மாகாணம் "பி" ராஜ்யத்திலும் அஸ்ஸாம் மாகாணம் "ஸி" ராஜ்யத்திலும் சேர்ந்துகொள்ள வேண்டுமோ? அஸ்ஸாம் மாகாணம் பெரும்பாலும் முஸ்லிமல்லாத மாகாணமாயிற்றே. அறிக்கையானது நிர்ப்பந்தம் எதுவும் செய்வதில்லை என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்து நிற்பதா சேர்ந்து கொள்வதா என்ற விஷயத்தில் பரிபூரணமான சுதந்திரம் அளிக்க வேண்டியதே நியாயம் என்று எண்ணுகிறேன். ஏ. பி. ஸி. என்ற தொகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ள மாகாணங்களுக்கு அதில் சேரவோ சேராமலிருக்கவோ சுதந்திரம் உண்டு சேர்ந்தபின் பிரிந்து போவதற்கும் உரிமை உண்டு. அது ஒரு அதிகப்படியான பாதுகாப்பு ஆகும். ஆயினும் அறிக்கையில் 15 (5) பதியில் காணப்படும் சுதந்திரமே பிரதானமானது:—

"மாகாணங்கள் சட்ட சபை மந்திரிசபையுடன் கூடிய தொகுதியாகச் சேர்ந்துகொள்ள உரிமையுடையதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு தொகுதியும் பொதுவாக நிர்வகிக்க வேண்டிய விஷயங்கள் இவை என்று நிர்ணயித்துக் கொள்ளலாம்."

### கலவரத்திற்கு நியாயமில்லை

19-வது பத்தியில் கட்டளையாகவின்றி யோசனையாகக் கூறியிருப்பதானது இந்தச் சுதந்திரத்தைப் பறித்து விடவில்லை என்பது தெளிவு. அரசியல் நிர்ணய சபையின் முதற் கூட்டத்தில் அதன் தலைவர் மாகாணப்பிரதிநிதிகள், தொகுதி சேரும் தத்துவத்தை ஒத்துக்கொள்கிருர்களா? ஏற்றுக்கொண்டால் தங்கள் மாகாணம் சேர வேண்டியதாகக் கூறப்பட்டிருக்கும் தொகுதியை ஒத்துக்கொள்ளுகிருர்களா என்று கேட்பார். இவ்விதமாக ஒவ்வொரு மாகாணத்துக்கும் இயற்கையாகவேயுள்ள சுதந்திரமும் 15 (5) பத்தி தரும் சுதந்திரமும் பாதுகாக்கப்படுகின்றன. இந்த விதமாகப் பொருள் கொண்டால்தான் இரண்டு பத்திகளுக்குமிடையிலுள்ள முரண்பாடும் நிர்ப்பந்தம் செய்வதாக அறிக்கைமீது கூறக்கூடிய குறையும்நிவர்த்தியாகும். ஆதலால் தொகுதி யோசனையாலும், தொகுதியில் மாகாணங்களை அவற்றின் விருப்பத்தைக் கேளாமல் சேர்த்திருக்கும் முறையாலும் கலக்கமடைந்திருப்பவர்கள் என்னுடைய வியாக்கியானத்தை ஏற்றுக்கொண்டால் கலவரத்துக்குசிறிதளவுகூடக் காரணமிராது என்பதை அறிந்து கொள்வார்கள்.

### திகைக்கவேண்டிய அவசியமில்லை

அவசரமாகப் படிப்பவர்களைத் திகைக்க வைக்கக்கூடிய விஷயங்கள் பல அறிக்கையில் காணப்படுகின்றன. ஆனால் அறிக்கையானது அதி சீக்கிரத்தில் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான வழியைக் காட்டி அதை ஏற்றுக்கொள்ளும்படி நம்மை வேண்டிக்கொள்வதாகவும் நமக்குப் புத்திமதி கூறுவதாகவுமே இருப்பதை மறந்துவிட்டாற்றான் இந்தத் திகைப்பு உண்டாகும். அதி சீக்கிரத்தில் இந்தியா சுதந்திரம் அடையவேண்டியதன் காரணத்தை இன்றும் விளக்கிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. இப்பொழுது உண்டாயிருக்கும் குழப்பத்திலிருந்து புதியதோர் உலகம் உற்பத்தியாகவிருக்கும். தற்கால நிலைமையில் அடிமையாயிருக்கும் இந்தியா பிரிட்டிஷ்கிரீடத்தில் முன்போல் 'தலைசிறந்த ரத்னமாக' இருக்கமுடியாது. குப்பைத்தொட்டியில் எறியவேண்டிய அளவு கறுப்புநிறமான களங்கமாகவேயிருக்கும். பிரிட்டிஷ் கிரீடம் பிரிட்டனுக்கும் உலகத்துக்கும் வேறுவிதமாக இதைவிட அதிகமான நன்மையைச் செய்யமுடியு மென்று நம்பவும் பிரார்த்திக்கவும் செய்வோமாக. 'தலைசிறந்த ரத்னம்' என்று கூறுவது வெறும் ஆணவமேயாகும். 'வாக்குறுதிப் பத்திரத்'தின்படி அணுவளவும் பிசகாமல் நடந்து கொண்டால், பிரிட்டிஷ் கிரீடமானது கடமையைச் சரிவர நிறைவேற்றுவதன்மூலம் உரிமையாகக் கிடைக்கக்கூடிய தனிச் சிறப்புடைய இரத்தினத்தைப் பெற்றுவிடும் என்பதில் சந்தேகமில்லை.

வாக்குறுதிப்பத்திரத்தை நிறைவேற்றுவதற்காகச் செய்யப்படவேண்டிய விஷயங்கள் பலவுள. அவற்றைக்குறித்து அடுத்த ஹரிஜன் இதழில் எழுதுவேன்.

—தமிழ் ஹரிஜன்

## தேகவியோகம்
### சைவப் பெரியார்
### திரு. வி. தாமோதரம்பிள்ளை

சாவகச்சேரி வாசரும் சைவப் பெரியாருமான திரு. வி. தாமோதரம்பிள்ளை அவர்கள் இம்மாதம் 24-ந் திகதி தமது 84-வது வயதிற் சிவபதமடைந்தார். சாவகச்சேரியில் வர்த்தக மன்னனுகவிருந்த காலத்திலும் அதன் பின்னரும் சைவசமய வளர்ச்சிக்காகவும் தென்மராட்சி மக்களின் கல்விவளர்ச்சிக்காகவும் சலியாதுழைத்தவர். சாவகச்சேரி இந்துக்கல்லூரியும் அதன் தமிழ்ப் பள்ளிக்கூடமும் இப்பெரியாரால் ஸதாபிக்கப்பெற்றன. இவை அவருடைய ஞாபகச்சின்னங்களாக விளங்குகின்றன. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையாரிடம் இவ்வித்தியாசாலைகளை ஒப்படைக்கமுன் இப்பெரியார், தமது கஷ்ட நஷ்டங்களைப் பாராது இந்த ஸ்தாபனங்களை திறம்படப் பரிபாலித்து வந்தார். சைவசமயத்துக்குந் தமிழ்க்கல்விக்கும் ஆபத்து நேர்ந்த அக்காலத்தில் திரு. தாமோதரம்பிள்ளை யவர்கள் முன்வந்து உழையாதுவிடின் இன்று தென்மராட்சியில் சைவ சமயம் சோபிக்கமுடியாது.

இவர் சிவபக்தி நிறைந்தவர். தமது இல்லத்துக்கருகிற் சைவ ஆலயம் ஒன்றையும் ஸ்தாபித்துள்ளார். இப்பெரியாரின் பிரிவு சைவ உலகிற்கு ஒரு நஷ்டம். இறுதிச் சடங்குகள் இவருடைய புதல்வன் டொக்டர் T. P. தாமோதரம் அவர்களால் நிறைவேற்றப்பட்டன. இவருடையபிரிவால் துயருறும்பந்து மித்திரர்க்கு எமது அனுதாபங்கள். இச் சைவப் பெரியாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

## 245-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

1945-ம் ஆண்டு டிசம்பர்மாதம் எம்மாலும் இறக்குமதிக் கட்டுப்பாட்டதிகாரியாலும், இறக்குமதி லைசன்ஸ் உடையவர்கள் புடவைகளும் உடுப்புகளும் இறக்குமதி செய்யப் புடவை லைசன்சும் வைத்திருக்க வேண்டுமென்று விளம்பரஞ் செய்யப்பட்டதை அவதானிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

ச. ஞெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு. 24-5-1946 [2790]

யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி
1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம்
ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்

(2734)

"MEDIUM"
[Estd. 1929]
261, KANKESANTURAI ROAD
VANNARPONNAI :: JAFFNA
Please correspond with the Manager for the Sale of Properties and anything commercial in North Ceylon

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 ஜூன் 2உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org